புலன்வகைபெற்றோர்க்கரிட்டமுமுண்டாம் புந்தியுமாதியினனுளிற்
சலஞ்சிரநோயுங்கல்வியும்புத்தி சருவுருங்கவலையுமென்னே. 175

இராகு தனது புக்தியில் தனது செவ்வாய் கேது சனி இந்த அந்தர நாதர்கள் பாபசுபபலன்பெறில் மிகுதியான நோயும் குடும்பத்திராளுக்கு துக்கசோகம் உடனுபிற் சமானமானவர்கட்கு கஷ்ட நஷ்ட பிணிவார்தையும் வாகன மல்லது விஷங்களால் தேகவுபாதியும் அலைச்சல் பூர்வப் பொருளாலுஞ் சுயமுயர்ச்சியாலும் கேடு விவாத துக்கம் ஆகும்.

சந்திரன் சுக்கிரன் குரு இவரந்திராதிபராகி சுபபலமாகில் சற்று வனுகூலமும் சில முயர்ச்சிகள் வருந்தலின்மேற் கைகூடுதலும் முன்வகைப் பூர்வப் பொருளின் விவாதவனுகூலமும் சத்துரு ஜெயமும் குடும்பசுப கல்யாண விரயம் ஸ்தானபேதமான அலைச்சலாகும்.

பாபராகில் பலவகைக் கேடும் மானக்குறைவும் வெண்சிகப்பு வஸ்துவால் நஷ்டமும் பலவகை துக்கம் பொருள் சேதம் கலகம் மனோகஷ்டம் விவாத முதலிய வலைச்சல்கள்.

புதன் சூரியன் பாபமாகில் பெற்றோர் துக்கம் பகை பிணிமுயர்ச்சியில் கலகமாகும் மனதுக்கு பல கஷ்ட பலனாகும்.

சுபமாகில் கல்வி முதலான முயர்ச்சியால் அற்ப பிரயோஜனம் பழமையான அபாத்தியதை கைகூடுதல் பலவகை வருந்திப்பின் கைகூடுதலாம்.

இராகு திசை குரு புக்தி அந்தர பலன்

அரவினிலரசன்றன்னு ளாதியாந்திங்கள்பாம்பும்
புரவலர்குற்றநோயும் புகழதுமெலியுமில்லிற்
றிரமிலாமனைவிதுன்பஞ் செல்வருக்கரிட்டங்காட்டுங்
கரியொடுசேயிற்சற்றே கலங்குப்பின்னுறமுண்டாமே. 176

உண்டாகும்புகரோன்புந்தி யுற்றமான்கரிசற்றேநாள்
விண்டிடுஞ்சுபமென்யோகம் மேலதாமரசுசெங்கோ
லண்டலாற்றனமுலாபம் அடுத்தவருதவிசெய்யார்
கெண்டொடுமணமும்பேரும் பிறபலமாகும்பேசே. 177

பேசியமுன்னோர்பாதப் பெற்றிடிற்பகையுந்தீது
னேசமோர்நிந்தையுண்டாம் நிருதியிற்றிரியநேரு
மாசையோடுற்றதெல்லா மரும்பகையுடையதாகும்
வாசமார்மங்கைகண்டம் வரும்பிணிவிவாதமாமே. 178

இராகுதிசை குருபுக்தி சுபபலமாகியும் இவர்வசாத் அந்தர நாதரான தனது சூரியன் சந்திரன் இராகுகேது இவர்கள் பகைபாவ ஸ்தானதிபத்தியஸ்திதியில் இருக்கில் பலவிதவாதம்பகை அகால போஜனம் மானபங்கம் ஜீவனாதிமுயர்ச்சிக்கேடு பலவாணிபத்தாற் திடீரென்ற நஷ்டம் கலகம் மோசடியாகப் பொருட்சேதம் குடும்பத் தில் மிக மேன்மையார் துக்கசோகம் பிணிபலனாகும்.

சுபபலனாகிற் சமபலனும் மேற்கண்ட கஷ்டங்களற்பங்காண் பித்து நீங்கும்.

சனியிற் சில பாகமும் சந்திர அற்சிலபாகமும் சுக்கிரன் புதன் இவரந்தரநாளில் சுபமாகயிருக்கில் வாகனம் வஸ்திராபாணம் பொன் தனம் நூதனஜீவனவெற்றி வியாபாராதிபிறபலம் சுபமங்களம் மிக மேலான ஜெயம் சத்துருநாசபலனாகும்.

பகை பாபமாகில் அற்ப கலகம் நோய் முதலிய கடன் அதிக பூர்வ விரய குணம் இவைகளும் பெண்கள்மகவு முதலிய குடும்ப சிரியவர்கட்கு அரிஷ்டமுண்டாகும்.

குஜன் சனி பாவமாகில் இவரந்தரம்பகை மனபயம் கலகம் துக்க சோகம் தடுமாற்றத்தால் தேகபீடை பந்துதுக்கம் தனசோராக்னி ஸமானநஷ்டமாகும் நரம்புதோல் ஸம்மந்த நோயாற்றுன்பமாம்.

சுபமாகிற் கலகம் நீங்கும் விவாதஜெயம் பந்துவகை கிலேசம் போனபொருளேனும் வஸ்து முயல்வு சீவிதங்களை வேறு ஸ்தானத் தில் திரும்பவும் பெருவன் என்பதாம்.

இராகுதிசை சனிபுக்தி அந்தரபலன்

பங்குவிற்றன துசேயும் பருதியுஞ்சிகிபாவந்தான்
மங்கையர்பெற்றோர் துக்கம் மன்னராற்கேடுநட்ட
மங்கத்திற் கயநோய்வாதை அயலிடஞ்செல்வம்பீடை
தங்கமும்போகும்வேறோர் தலத்திடைத்துக்கந்தானே. 179

தான்சுபஞ்சமமதாகும் சந்திரன் பொன்னேன்வெள்ளி
வான்மிகுஞ்சுபமென்மன்னும் வாராதபொருளும்யோகங்
தான துவாகநேருஞ் சஞ்சலமிடரும்போமா
லான தாலாபமாகும் அரிவையுமடைவாய்த்தானே. 180

அடைவரும்பவமேற்றீது மற்பமாம்மால்பாம்பின்னாட்
குடைநிழன்மன்னராலே கூடுதலலைந்துபோகும்
படைதனாற்கலகங்கண்டம் பரத்தையர்வகையாற்றுக்கந்
தடையுறுஞ்சுபமேலற்பர் தன்வரத் திருந்தானே. 181

சனிபுக்தி தனது செவ்வாய் சூரியன்கேது இவரந்திராதிபர்கள் பாபபலமாகில் அவர்களந்தரகாலத்தில் மிருகஷ்டம் இராஜதெண்டனுதிபயம் கலகம் தனநஷ்டம் விஷேசமானநோய் கஷ்டம் குடும்பவுயிர் ஸமானவர்களுடைய துக்கமாகும்.

சுபபலமேனில்பலவர்ண வியாபாரலாபம் ஜீவன உத்தியோகாதி வெற்றிலாபங்கள் வடமேற்கு திக்குகளிலுண்டாகும் நஷ்டமான பழய பொருட்சேரும் அவமானம் நீங்குமாம்.

சந்திர சுக்கிரன் குரு வருங்காலம் சுபபலமெனில் பிறபலவதிகாராதிமேன்மை கிடைக்கும் கெட்டவைகள் வலுவில் வந்துகூடும் இராஜபூஜிதம் வெற்றியுண்டாகும் வடக்கிலும் தென்கிழக்கினுலுஞ் செயமுண்டாகும் வஸ்திராபாணதிலாபமாம் வாகனங்கூடும் பிறபல சுபமங்களமாகும்.

பாபமாகில் ஸமகஷ்டமும் அதிக விரயம் கடன் அலைச்சல் பிரயோசன மிருக்காது பலவித கவலைதோன்றும்.

புதன் இராகு பாபமாகில் சோரசத்துருபயம் பலவித கவலை துக்கசோகம் அலைச்சல் அகாலபோஜனம் மனதுக்கபயம் அனேகவித தனநஷ்டம் வெறுப்பு முண்டாகும்.

சுபமாகில் கஷ்டந் தீர்ந்ததுபோற்றோன்றும் முயர்ச்சிகள் ஸமனுகும் கலகம்போம் நூதன இடத்தைச்சேரினும் லாபமிராது நினைத்தவை மிகுந்த பிரயாசையின்மீது கூடும்.

இராகுதிசை புதன்புக்தி அந்தரபலன்

நாகத்திற்புந்திதன்னு ணன்மதியிருவர்நாளும்
போகத்தாற்சுகமில்லான் புலன்றனிற்பீடைதோன்று
மாகமும்பலவாங்கஷ்டம் அற்பமாற்றீதுமாகுஞ்
சோகமாம்பொன்சேய்வெள்ளி சுபமுரிற்சொல்லுவோமே. 182

சொன்கவியாசராலுஞ் சுகமுடன்சீவிதங்க
ணன்மனைப்போகம்லாபம் நால்வகையிடமுஞ்சேருந்
தன்னவரின்பவெற்றி தான்வரும்பவமேற்றுன்ப
மன்றனுலற்பமாகும் வாணிபநஷ்டமாமே. 183

நட்டமாமாவுகாரி நல்லரேல்விவாதலாபங்
கட்டமும்பிணபாற்றீருங் களவுபோலுற்றகூடு
மிட்டமாம்புதியரின்பம் என்மணம்மகப்பேருண்டாந்
துட்டனுயுரிலோகேடுஞ் சுகமிலைமன்னுற்றீதே. 184

புதன்புக்தி தனது சூரியன் சந்திரன் இந்த அந்தரகாலம் சுபம் பாவம் எவைபுரினும் பெற்ேறார் வகை துக்கசோகம் கலகம் மந்தமாக இருத்தல் புத்திக்குறைவும் பலவகை யலைச்சல் வித்தை நட்டமும் முயர்ச்சி சமனாகும்.

குரு சுக்கிரன் செவ்வாய் சுபபலமாகில் இவர் அந்தரம் முயர்ச்சி வெற்றி இராஜாங்கஜெயம் சீவனவெற்றி வெண்மை மஞ்சள் வர்ண வஸ்துவால் பிறபலலாபம் நாணயம் சுபகல்யாணம் நூதன ஸ்திரீ போகம் கல்வி ஜெபம் மிக பிறப்லம் ஸ்தானபேத மாகும்.

பாபமாகில் நஷ்டம் அற்பபகை சமம் ஸ்திரமில்லாத மேன்மை மனக்கவலை குடும்பத்திராளுடன் மனப்பகை சோரம் இவ்வித ஸம பலனாகும்.

இராகு கேது சனி இவர் சுபமாகில் அந்தரகாலம் தனக்கறியா ததும் ஸம்மந்த மில்லாதவைகளுக் கதிபதியானாலும் கவலை துக்கமும் சாதி பிருஷ்டாதி குறை வுண்டாகினும் ஜீவனாதிகாராதி முயர்ச்சி வெற்றிகளும் பிறபலமேன் பாடுகளும் அலைக்கல் தூரஸ்தலம் போக வண்ணுசலாகும்.

பாபமாகில் மானக்குறை இராஜாங்கத்தாற் றுக்கம் பலகவலை குடும்பசோகம் வாகனாதிக்குறைவு கடன் பலகவலை ஸ்தானபேதம் தலை மறைவாகுதல் பலவித சோகபலனாகும் களத்திரபுத்திர குடும்ப துக்கமாம்.

இராகுதிசை கேதுபுக்தி யந்தரபலன்

பணிதனிற்சிகியின் றன்னாட் பருதிசைசேய்நரிநாட்கேடாங்
கணிகையாவனிதையாலுங் கனதனவிரயம்நோயுந்
துணிவுரும்பகையுந்துக்கஞ் சுபமெனிற்குடும்பலன்க
ரணிவகையற்பலாபம் அடுத்தநாட்சுபமுண்டாமே.

ஆமதிபொன்மால்வேள்வி அசுபமேற்குடும்பகன்ம
மாம்பதிகேடும்நோயும் அரசருமவணிகத்தாலும்
போம்பலவிரயம்சோகம் புண்ணதாம்பாம்பிற்செல்வம்
வேம்பதுமுருசிபோலா மிகுபகையின்பமாமே.

இராகுதிசை கேதுபுக்தி தனது சூரியன் சனி குஜன் அந்தரம் சுபபலமாகிற் சமகஷ்டம் பிணிசுகம் பகை நீங்கும் முயர்ச்சி நீண்ட நாள் மேற் செயம் பெறும்.

பாபமாகிற் பிறபலக்கேடும் இராஜவிட்வாராதிகலகம் திடீரென்ற ஆபத்து சோகவிரணம் பெண்வகையா லவமானாதிக்குறைவு பலவகை கஷ்டம் சோராக்கினி பயமாகும்.

சந்திர புத குரு சுக்கிரன் சுபமுரில் அவர்களந்தரநாள் கீழோ ராலும் இளைத்தவானுபாதி முயர்ச்சியாலும் ஜெயம் மேன்மை தன தானியாதி விருத்திகள் நூதன பூமி முதலானவைகள் சேருதலும் விவாதஜெயம் வாகனம் மாடு வியாபார விருத்திகள் வெண் சிகப்பு வகையால் விருத்தியாகும்.

பாபமாகில் கருமை வெண்மையாற்றன நஷ்டம் பெண்வகை குடும்ப மனுஷராலும் பல கலகம் குறைவு சோகம் கடன் பல இட லைச்சல் மனோகஷ்டமாகும்.

இராகு சுபமாகில் மிகவெற்றி ஸன்மான ஜெயம் பல கலகத்தா லும் இழிவால் மேன்மை பலவகை வெற்றியாம்.

பாபமாகில் பலவித விஷயமான பிணிவாதை அலைச்சல் பயந்து அலைகுதல் புக்திக்குறைவு அதிக நஷ்டம் பலவகையான விரய பல னுண்டாகும்.

எவர் புக்தியந்தர மானாலும் சுபபாகம் கலந்திருக்கும் கிரக அந்தரகாலத்தில் அந்த கிரககாலத்தில் அந்தக் கிரகத்திற்கு சொல்லி யிருக்கும் சுபபாப பலன்களை கலந்து இலேசான கஷ்டமும் இலே சான யோகசுகமும் மிச்சபலமாக கலந்தடைவன் என்பதாம்.

இராகுதிசை சுக்கிரபுக்தி அந்தரபலன்

உடனுகந்தனிலேவெள்ளி யுற்றவன்றனதுகாரி
குடதிசையிவர்நாடன்னிற் குருகிடுங்கல்விவெற்றி
இடமதுபிரழ்வதாகும் எண்ணுதல்கூடாபீடை
இடமுடையாட்குமுண்டா மிவனுக்குமெய்தும்பாரே.

பாரவன்பணியுமிந்நாட் பகைமனத்திடருநோயும்
காசமுமன்னர்பெண்ணாற் கனகமுமறிவுகேடாம்
பேரொடுலன்மந்துக்கம் பிலஞ்சுபமற்பவெற்றி
தேருமேபகைகணீங்கிச் சிலவகைகூடுஞ்செப்பே.

செப்பியமதிபொன்மாலில் செயமொடுகாலியின்பம்
தப்பிதம்மன்னூற்வெற்றி தகவுருமணமும்பேரும்
ஒப்புருமினத்தாலின்ப முயர்வுருஞ்சீவிதங்கள்
இப்புவியசுபம்மேட மிடற் பலகவலையென்னே.

சுக்கிரன் புக்தி தனது சூரியன் சனி இவர் பாபமுரில் அந்த நாள் பகை கலகம் விசாரம் கடன் குடும்பத்துக்க கேள்வி மன்னரால் பயம்.

சுபமாகில் சம பலனும் நினைத்தவை காலதாமிதமும் அதிக விர யம் உள்ளுக்குள் கலகம் வருத்த பலனுகும் களத்திர குடும்பம் ஜாதக னிவர்களுக்கும் நோயாகும் புத்தி குறை அரசபலது பெண்ணுற் குறைவும் நஷ்டமுமாகும்.

செவ்வாய் இராகு கேது பாபமாகில் மிகுபயம் இராசர் பெண் வகை யிவர்களாற் கலகம் குறைவு கரும சூதகம் ஜலம் நரம்பு ரோக பாதை இடம்விட்டுழலுதலாகும்.

சுபமாகில் ஸமலாபம் பகை நீங்கும் மேற்கண்ட கொடுமை பயம் தோன்றி நீங்கும் பின் ஜெயமாகும்.

சந்திரன் குரு புதன் சுபமாகில் விசேஷ வெற்றி வராத பொரு ளுஞ் சீவனமும் எண்ணுமற் கூடு சுபமங்களம் நடக்கும் கீர்த்தி யதி கமும் நன்மங்கை போகம் பலவாகன வெற்றியாகும்.

பாபமாகில் துக்கமும் பெண்வகையா லற்ப மனசங்கடமும் கட னல் தொந்திரவும் மனக்கலக்கமும் பலவகை விரயமும் ஸ்தான பிரு ஷ்டமும் லாபசீவன குறைவிலாது ஸமமாகும் வாணிபத்தால் நட்டம் போற்றேன்றி அற்ப லாபமடைவன்.

ராகு திசை சூரியன் புக்தி யந்தர பலன்

குறித்தபாம்பதனிலாதி குஜன்புகர்தன துவிர்து
பறிப்பரேவின்பம்முன்னேர் பகைபிணிகருமங்கூடா
தரித்திடுஞ்சுரமுன்னேயும் அன்பராற்பகையுந்தீயும்
பொரித்திடுசுபமென் அற்பம் போற்றுவர்புகனுள்ளாரே. 190

புகழிலாப்பணியுங்காரி பொன்னுடன்விரயமாகு
மகமகிழ்தோன்ருத்துன்பம் அவன்வகைத்துக்கமாகுஞ்
சகமதிற்கருமைசெம்மை தன்னிஞற்றீங்குங்கேடும்
பகையுரும்விவாதமெல்லாம் பலஞ்சுபம்மற்பம்பாரே. 191

பார்புதன்பொன்மேலாகிற் பலதனவின்பம்வேழ்வி
சீர்படுமுயல்வுவெற்றி சிந்தைகள்சிகமேலாகு
னேர்படும்வாகனங்க ணிலைபெருங்வணிகலாபம்
ஓர்தலாங்கல்விவெற்றி யுண்மையாற்றனமுமென்னே. 192

சூரியன் புக்தியில் தனது குஜன் சுக்கிரன் சந்திரன் இந்த காலம் பாபபலமாகில் கலகம் சோராக்கினி பயம் பெண் சீவனம் இவைகளாற் பகை கிலேசம் குறைவு விவாதமாம் பலவித நோயுண் டாம் கவலை தன நஷ்டமாகும்,

சனி பாம்புகளில் மிகவும் பகை விஷநீர் நோயும் பலவகையாக மனத்துட் கலகமும் சூது முதலிய ஏமாற்றுதலால் தனக்கேடு ஆகும்.

சுபமாகில் மேற்சொன்ன கெடுதல்கள் அற்பம் காண்பித்துப் பின் நீங்குதல்களும், சுபமங்கள கலகமும் அலைச்சல் அகால போசனத்தால் பின் லாபமும் ஆகும்.

புதன் குரு சுபபலமாகில் இவரந்திரகாலம் மிகவெற்றியும் பிறபல சுபமங்களமும் மிககீர்த்தி இராஜாங்க முதலிய வெற்றிகள் பிறபல சுகமுண்டாம்.

பாபமாகில் மிகவிரோதமின்றி சமபலனும் கல்வி பிறபலமாகினும் சீவனக் குறைவுகளால் பல துக்கமும் பலவித முயர்ச்சியுங் கைகூடாது வருந்தி கடையில் வாணிப முதலிய முயர்ச்சிகளால் இலாபம் பெற்று பரதேச மூலியவனுகூலமும் குடும்ப சிசு துக்கமுமுண்டாகும்.

இராகு திசை சந்திரன் புக்தி அந்தர பலன்

செய்யபாம்பதனிற்றிங்கள் சேயொடுபணிநாட்பாப
முய்வகையழியும்பேத முற்றவர்துக்கநோயாம்
வெய்யவன்காரிநாளில் விண்டனநட்டமுன்னோ
ரய்யமாந்துக்கபீடை யரிவைக்குமரிட்டமாமே. 193

அரியவன்புகர்மாலன்பு மடுத்தவரின்பவெற்றி
துரிதமாஞ்சீவனங்கள் சுபமணப்பேரோடில்லும்
புரிகுவன்வெள்ளிசில்பாற் புரிகுழற்றுக்கம்காட்டும்
பரியுரும்பவமேற்றீதாய் பசர்சமபலனும்பாரே. 194

இராகு திசையில் சந்திரன் புக்தியுள் தனது செவ்வாய் பாம்புகள் பகை பாபமாகில் அவர்களின் அந்தரம் விஷசுராதி கபபீடையும் சீவிதாதிகளை வலுவில் வெறுத்தலும் மனக்கவலை துக்கம் பரஸ்தல சஞ்சாரம்.

சுபமாகில் அற்பவாணிப லாபங் காட்டி நஷ்ட முண்டாக்கும் பகை பிணி நீங்கும் பகையர்களா லாதரிக்க நேரும் மானக்குறைவு ஆகும்.

சூரியன் சனி அந்தரம் பொதுவாக சமகலகம் மனப்பேதம் பயம் அசனசயனாதி சுகக்குறைவும் பெற்றோர்வகை துக்கம் அலைச்சல் பலவித வருத்தமும் கஷ்டமும் வரவேண்டியவைகளாற் கலகமாகும்.

குரு சுக்கிரன் புதன் அந்தரம் சுபமாகில் விருந்து போசனம் கல்யாண மேன்மை வெற்றி வெண்மை செம்மை வர்ண வியாபார விருத்திகளும் வடக்கு கிழக்குகளாலும் தெற்கினாலும் முயற்சி வெற்றிகள் பிரபல ஜெயமாகும் குடும்ப விருத்தியான புத்திர லாபமாம்.

பாபமெனில் குடும்பத்துள்ளேயே கலகம் பெண் வகையால் கிலேசம் சமலாபம் விவ தம் சீவனக்குறை சமனாகும்.

சுக்கிரனில் சிலபாகநாள் பிறபல்பயம் பெண்வகையாற் குறை வேனும் துக்கமேனுஞ்சம்பவிக்கும் முயர்ச்சிகெடும் நீர்ரோகபயமாம்.

இராகுதிசை-குஜன்புக்தி-அந்தர பலன்

பாம்பினிற்சேய்தன்னாளும் பருதியோடரவுகேடா
மாம்வகைகழியுனட்ட மர்சராற்பயமுமுண்டாம்
தாம்பிரத்துடனேநாசம் தையலர்வவையாற்கேடும்
போஞ்சுபமாகில்வெள்ளி புந்தியிற்புகழுமாமே. 195

மாதவன்றனிலேவெற்றி வாழ்வுடனின்பமேலாம்
கோதுருங்காரியிந்து குணம்பின்பான்மகிழ்ச்சிசேரும்
தீதிலாவிரயமேலாந் திடத்தவையழிவுண்டாகும்
வாதமாம்வழக்குவெற்றி வாணிபம்சுபமுங்கேடே. 196

இராகுதிசையில் செவ்வாய்புத்திநாளுள் தனது சூரியன் பாம்புகள் பாபமாகில் பெற்றோர்சகோதிர மிவ்வகைக்கேடும் துக்கமுமாகும் விஷசுரம் இரத்தநோய் பிணியுண்டாகும் அக்கினிபயம் காவினி லுண்டாகும்.

சுபமாகில் மேற்கூறியவைகளி லற்பபயந்தோன்றி நீங்கும் மிக வின்பமில்லானும் சமபலனாக யோகம் நடக்கும்.

சுக்கிரன் புதன் சுபமாகில் அவாந்தரநாளில் வெற்றி சமமாகும் முயர்ச்சிகெட்டு பின் தனக்கும் அனுகூலமான சுபமங்கள விரயம் கடன்பேரிலுண்டாகும் பிரரின் வாகனாதிகூடும் தன்னவை திரமிலா தாம்.

குரு அந்திரம் மத்திமபலனாகியும் சுபமும் கட்டமும் கலந்து நடக்கும்.

சனி சந்திரன் இவர்சுபராகில் அவாந்திரநாளில் கெட்டதும் பூர்வப்பொருளேனும் வாராதபொருளேனும் விவாதத்திற்கிடைக்க நேரும் பகைநீங்கும் மிகவுமேலான இன்பமுண்டாகும்.

பாபமாகில் கபவாத நோயுண்டாகும் பகையும் மனப்பேதமும் குடும்பாதிதுக்கமும் முயர்ச்சிகேடும் வாணிப நஷ்டமும் பலிக்கும்.

குருமகாதிசை தனதுபுக்தி அந்தரபலன்

அரசனார்திசையுட்டனதினிலரசனந்தராஞ் சுபர்தினத்துரிலோ
விரசமாயுற்றூர்பின்சுகமாவரியல் பொடுசமதனலாபம்

வரிசையுண்முதலாய்கெட்டபின் கூடும்வாழ்க்கையாமின்பமுமன்னுற்
சரசமாய்வாழ்வனசுபமேற்பகையுந் தந்திடும்குணத்துடையவமே.

அவமதுமேலாமதிகுஜன்சனிநா ளவனறனக்கன்புருசுபமாய் [வன்
நவமெனக்கல்லோடாடையாபரணம் நாற்பொருண்வழக்கினுல்வெல்
றவமதுகூடும்மணமகப்பேருஞ் சாற்றிடுபுவிமுதலவரவாங்
கவனமாம்வடமேற்றிசையினுற்செல்வங் களத்திரபீடைபின்சுபமே.

பின்னிவர்பவமேல்மனையுடன்மக்கட் பீடைசேர்வாதநோய்கலக
மின்னிவராலுமன்னவராலு மிசைவிலாவாணிப்கேடாங்
தன்னினகருமமுன்றிசையலைச்சத்ருனுருவாதமுமுண்டாம்
மின்னிடைப்பீடைகதிர்பணிநாளில் விதித்திடுமுன்பலன்பிணியே.

பிணியதுகண்டஞ்சுபமெனினீங்கும் பின்சுகபலனதுகாணுன்
றுணிபுகர்மானுட்சுபமலனெய்திற் றுளங்கிடும்பலவகைச்சுகமு
மணியொடுவணிகம்பலமுறையாலு மருந்தனஞ்சீவிதமுடனே
குணிதமாமன்னர்குறிப்பிலாயோகங் கூடிடும்பகையினிற்கேடே.

கேடுசேர்கதிர்பாம்பிவர்வருநாளிற் கிளைவழித்துக்கசூதகமும்
பீடுருமன்னுல்அவமகஸ்மாத்தா லாடையோட்ணிவகைசோரம்
நீடிலாவிடநோய்ப்பலபகைவாத னிகழ்த்திடும்வெறுப்புடன்றேசம்
ஓடுவின்சுபமேல்முன்வகையாவு மொன்றடனேடிடுஞ்சுபமே.

இந்தகுருவின்றிசை சுயபுக்தியில் தனது அந்தரநாள் சுபமாகினும் பாவமாகினும் முயல்வுநீடாவாம் பலவிதமான கலையும் கலகம் விவாதம் தனநஷ்டம் ஓர் தருமமல்லது நல் குடும்பாதிமூலமாய் அவக்யாதியான பெயராகும்.

சந்திரன் குஜன் சனி இந்த அந்தரநாதர்கள் 6-8-12-11-களிலிருக்கினும் வதிபதியாயிருந்தாலும் மேற்கண்ட ஆதிபத்தியம் லக்கினத்துக்கும் புத்தி திசாநாதர்களுக்கும் மேற்கண்ட ஆதிபத்தியமாவது ஸ்திதியாவது மிருக்கில் மிகவும் பலநோயும் பலவிரோத விவாதமும் சீவனவிஷயத்தாற் பலகஷ்ட நஷ்டமும் பெற்றோரினதுக்கமேனும் பெற்றோர்சமானிகளின்றுக்கமேனுமுண்டாகும் தூரஸ்தலசஞ்சாரங்கடன் இராஜவிட்வரபயமாகும்.

சுபாதிபத்திய ஸ்திதியிலிருக்கில் தனலாபம் கெட்டபொருளும் கைவிட்டவைகளுங் கூடும் பழமைவஸ்து பொருளைப் பெருவன் அற்பவியாதி நீங்கும் பகைவிலகும் வடக்கு மேற்குகளில் சீவன வெற்றி முதலிய நூதன ஸம்மந்தப்பொருள் கிடைக்கும்.

சூரியன் பாம்புகள் சுபபலமாகில் வாந்தாகாலநாட்களில் அற்பலாபம் அலைச்சல் மிகுவருத்தத்தின்மேல் முயல்வுகூடும் எத்தின

காரியவெற்றி விவாகத்தின்பேரில் முயர்ச்சிகூடும் தேசாந்திர சஞ்சாரமாகும்.

பாபபலமாகில் முயல்வுகெடும் மிருகலகம் மிகவுமகஸ்மாத்தான விவாதமும் கலகமும் உண்டாகும் பிசர்பொருளுக்கதிபதியாக வாவது வேலைசெய்பவனுகவாவ திருக்கையாலே மிகவும் நஷ்டந் துன்ப முண்டாகும் கடன் அதிககிலேசமும் தோல் நரம்புரோக வியாதியுண்டாகும் பெற்ருேர் முதலியவர் துக்கசூதகக் கேள்வியாம்.

குருதிசை சனிபுக்தி யந்திரபலன்

பொன்னவன் றனிலேகாரி புகழ்வன தாவுநாளின்
மின்னவர் துக்கமன்னுல் மிருதனவ்ரயமலேச்சற்
றுன்னவர்பகையாம்ரோகம் சுபரொனிற்சமமதாகுங்
கன்னல்போல்மொழியினுளால் கலசமுமாகுந்தானே. 202

தானமாமுந்துவெள்ளி சாருநற்சுபமேலின்ப
மானமாமனையாள்வேழ்வி வருஞ்சுகவாகனங்கள்
கானமாமின்பமேலாங் கணக்கனேற்சமமதாகும்
வானுலசேயோனுதி வருமுனேபகையும்நோயும். 203

நோயுருங்கலகமெல்லாம் நுதல்பிதிர்வகையாற்றேன்றும்
வாய்சுசிதன்னுலய்யம் மன்னவன்சுபமேற்செங்கோ
லோய்விலாதின்பம்வெற்றி யுற்றவர்சேர்வர்பேறு
தீயதுவகலுமென்றே தேயபாந்த்ராந்தன்றுற்றனே. 204

இந்த குருதிசை சனிபுக்திநாதன் திசாநாதனுக்கு சுபம்பெற்றும் லக்கினவசாதும் பிறபலனுகி யிருந்துள்ள இந்தசனிபுக்தி காலத்தில் வருந்தனது அந்தரமானது பலவகை வருத்தமும் அதிக செலவும் பலவகை கலகமும் கடன் முயர்ச்சிவையால் மனதுக்கு சங்கடமும் பகையும் ஸ்தானபேதம் விஷசீருபத்திரவம் கால்களிலும் நேரும் ஒருவர்கட்கு இயன்று நடத்தும் முயர்ச்சிகளினுலே பின் குறைவும் நஷ்ட ஸங்கடமும் நேரும்.

பாம்புகளின் அந்தாமும் அசுப பாவராதிபத்தியமாகில் இவை போலவேயாம்.

சுபபலமுரில் தீங்குபோற்கண்ட மேற்கூறிய ஒவ்வொன்றும் பயம்போற்றேன்றிநீங்கும் களத்திரபுத்திராதிசோகபீடையுண்டாகி நீங்கும் கிழக்குமேற்கென்னுங் திக்குகளிலொரு அங்கியர்கட்குள் சிலவதிகாரமேன்மை ஸ்திரமின்றிப் பெருதலாலே சுகமடைவன்.

குஜன் அந்தரநாள் சுபமாகில் சகோதிராதிகளுக்கும் பெண் வகையார்களுக்கும் மிகவும் மேன்மையும் கைம்பெண் ணவர்களாற் சுகாதி லாபத்தைப் பெருவன் தனவிரயமாகும் ரக்தரோ யற்பமுண் டாகும்.

பாபனுகில் ஞாதி முதலியவர்களாற் கலகமும் மனதுக்கு நஷ் டமு முண்டாகும் பலவகையான விரயம்பெருவன் நாமக்குறைவுண் டாம் கடுமையான பயந்தொந்திரவு திடீரென்று வரும்.

குரு சுபமாகில் வரந்தரநாள் மிகவுமதிகார ராஜ்பாதிபூத்தியமும் புத்திராதி குடும்ப விருத்தியும் சுகஸ்திரீ போகமும் இராஜ வெகுமா னுதி உத்தியோக விருத்தி பிறபலசுகம் சுபகல்யாணமும் கீர்த்தி தரு மம் நடத்துந் திரமையாம்.

பாபியாகில் முயல்வுகெட்டு நற்பெயருங் குன்றும் பலகவலை துக் கமும் நல்வயதான புத்திரயோக முண்டாகும் இருந்த லாபமுங் கெடும் இருதயரோயாம்.

சூரியன் சந்திரன் சுக்கிரன் சுபராயிருக்கி லிவர்நாள் மிகவும் யோகமும் செல்வமும் பிரபலமும் வாகனுதி சீவனுதிகார ராஜயோக மும் பெற்றோர்வகை வியாகூலம்நீங்கும் பலஸ்திரீகள் வலுவிற்போக சுகமுண்டாம் ஓரதிகாரங்கள் திடீரென்று லாபத்துடன் கைகூடும்.

பாபராகில் ஸ்திரீவகை துக்கசோகம் நீர்பிந்துரோகம் பலவகை முயல்வாற்சோகம் கண்மாங்கிச நோயுண்டாம் பிரகாச நஷ்டமுண் டாம் கடனுவன் பலவிவாதம் பெண்மூலமாய் வரும் வெள்ளை வஸ்து வால் நஷ்டமடைவன்.

சுபபாவம் கலந்திருக்கில் முன்கூறிய கெடுதலும் நலமும் அற் பங் காண்பித்து நீங்கும் ஸமமததிப பலனுகும்.

குருதிசை புதன் புக்தி யந்தரபலன்

பழுதிலாப்பொன்னிற்புந்திபலன் சமன்றனதுநாளில்
பழுதரும்பாம்போடாதி பகைவபரற்றீங்குண்டாகுந்
தொழுதிடுமனிதராலே துன்பமாம்நோய்கள்காட்டுந்
மிழுக்குகளாகுமென்றே யியம்பினர்கணிதநூலோர்.

நூலவன்புகரோன்காரிநுட்ப நற்சுபரேயாகில்
சேல்விழியின்பம்மன்னுற் றினந்தனவாதவெற்றி
மாலதுநீங்குமின்பம்வாராத பொருளுங்கூடும்
பாலகர்லாபமேலாம் பழுதரும்பவத்தாற்றுனே.

பவஞ்சசிசேயிற்கண்டம்பலத்த தோர்பீடைகாட்டும்
தவங்கெடும்பகையுள்ளோ ராற்றனம்பலவிரயமாகும்

அவமதாஞ்சுபமேலின்ப மற்பமாமத்திவங்க
ளுவகையாமேலதாகவுற்றவரின்பமென்னே. 204

இந்த புதன் புக்தியுள் தனது பாம்புகள் சூரியன் இவர் காலம் ஓர் மூயுல்வுங் கைகூடாது துக்கசோக முண்டாகும் அதிக விரயம் கலகம் உற்றூர் பகையும் எவையாற் சுகமடைவதை யெண்ணுகிறானோ அவை உடனே கெடும் தாய்வழி ஸ்திரீவகை துக்கமும் பெலக்குறைவான பீடைதோன்றும்.

தனது தவிர மற்றவர் சுபபலமாகி யிருக்கில் அற்பசுகமும் மேற்கூறிய மிருத்த கஷ்டமின்றிருக்கும் பகையுங் கலகமும் சாந்தமாகினும் விசனம் மேலாகி வரும் அலைச்ச லுண்டாகும்.

சுக்கிரன் சனி குரு இவர் சுபபலனாகில் இவரந்தரநாள் சகலமும் நீங்கும் நினைத்த காரியம் அற்பமாக உள்ளவைகள் காலதாமிதத்தின் மேற்செய முண்டாகும் சுபகல்யாண மாகும் பின்தாரமேனும் தாரமிருக்க வேறொரு பெண்போகமேனு முண்டாகும் வழக்கு வெல்லும் தெற்கு மேற்கு சஞ்சாரம் ஜெயலாபம் பெருவன் திடமுடைய பலனும் நூதன பிரபு சினேக முண்டாகும்.

பாவராகில் சகலமும் வாராத விரோதமும் வெகு நாளாக மறைந்த கலகமுண்டாகும் தனநஷ்டம் கடனும் புத்திரகளத்திராதி துக்கசோகாதி முதலானவை நேரும்.

குஜன் சந்திரனந்தரம் பாபராகில் எலும்புருக்கிநோய் பல துன்பம் கலகம் ரத்தகப நோயுண்டாகும் பலவகையான கிலேசம் பெருவன் பெற்றோர் சகோதரம் இவர் வகை துக்கம் நேரும்.

சுபராகில் மேற்கண்ட சகோதராதி வகையாரின்பம் மந்திம லாபம் கலகம் நீங்கும் என்பதாம்.

சுபமும் பாபாதிபத்திய ஸ்திதியுங் கலந்திருக்குங் கிரக அந்தரங்களில் அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கும் நலம் கேடு இவ்வித பலன்கள் ஸமமாக கலந்து அவர்களந்திரத்தில் நடக்குமென்றறிய வேண்டியது.

குரு திசை கேது புக்தி அந்தர பலன்

ஆங்குருபாம்பிலதிபயக்கேடு மாகிடும்பவமெனிலிதுவாம்
பாங்கயன்மதியிற்பலதனலாபம் பாற்பசுவாகனயோகம்
தாங்குளசேரும்சீவிதவெற்றி தானியவகைதனற்செல்வ
மோங்குமேகொள்கள்பவமெனிற்பீடை யோர்ந்திடுமெற்பமதாமே.

அற்பமாங்கரிவால்புகர்சுபமெய்தி லயல்தனவாகனயோகம்
கற்பமும்மணமும்மேலதாம்புவியுங் கலகமுஞ்செயத்துடனுமால்
சற்பனேரோராவின்பமுங்கூடுந் தாழ்வுரும்மசுபமேலிவர்க்கு
பற்பலாநாலும்பகைவருமற்றோர் பாபியேற்பலன்துதீதே. 209

குரு திசை கேது புக்தி காலத்தில் குரு சந்திரன் இவர்களினந்தரம் சுபபலாதிபதி ஸ்திதியி லிருக்கில் நூதன சுபாதிக ளின்பம் புதுமை வஸ்துவை யனுபவிப்பன் சமலாபம் சனி புதன் சுக்கிரன் காலம் சுபமாகில் சமலாபமும் முயர்ச்சி தாமிதமாகினும் வெற்றிகளையும் நகை நாணயாதி முயர்ச்சிகள் முன் கெட்டுப் பின் அடைவதும் பொன் தனம் பெண் இவ்வகையாற் கலகங்காட்டி நீங்குதலும் மோச விதமான சில விவாதமூலியத்தால் தனநஷ்டமும் பிணிவாதை யுண்டாகும்.

பாபம் பெரில் பலவகை கலகமுங் கெடுதலாக வருதலும் தன தானிய நஷ்டமும் பலவிதமான கேடு வியாதி துன்பம் துக்கபலனுருமென்றறிக.

மற்றய தனது பாம்பு குஜன் ரவி இந்த அந்தரநாள் சிரோபாராதிரோகம் பலவகை தேகாரிஷ்டம் கலகம் பலவிவாதமும் குடும்பத்துக்கசோகம் பலகவலையான பலன்கள் நடக்கும்.

குரு திசை சுக்கிர புக்தி அந்தர பலன்

அந்தணன்றனிலேவெள்ளி யலன்றன தாவங்காரி
பந்தகப்பவமேற்பீடை பல்லவர் அறிவையாக்கும்
சொந்தமாந்துக்கமெய்துஞ் சூதுநோயதுவாற்கண்டம்
வந்திடுஞ்சுகமேலற்பம் மாரிடுவருமையாலே. 210

வருமையாலதிபெண்மாலோன் வருஞ்சுபம்வழக்குவெல்லும்
தருமமாம்வாணிபத்தாற் றனமொடுமென்னராலும்
பெருமையாஞ்சீவனங்கள் பெண்போகஞ்சுபமேலின்பம்
வருமையுமின்றிவெற்றி யசுபமெற்கெடுமேலே. 211

மேலெனுஞ்சேயென்ஞாயா மிகுசுபம்வெற்றிமன்னர்
காலன்போலுள்ளவெல்லாங் கடுகவேலன்பமாகும்
சாலவேமனையுமின்பம் தான்வரும்பவமேற்கண்டம்
ஓலமாம்விழிநோய்தாப முயர்வின்றித்தணியும்பின்னே. 212

இந்த சுக்கிரன் புக்தியுள் தனது சனி இராகு கேதுக்களின் அந்தரம் பாபபலமாகில் பலவகை துக்கம் களத்திர புத்திர குடும்பாதி சோகம் தேசாடனம் கடன் குறைவு ஒருவரை நம்பிக் கெட்டபின் பலவித வாதம் பெண்வகை நகை மூலமாக கலக முண்டாம்.

சுபமாகில் இன்பமற்பமாகும் கலகம் நீங்கும் தனநஷ்ட முண்டாகிப் பின் ஜெயம்போல் தோன்றுதல் முடிவு பெருமை கல்வி முதலிய அற்ப ஜெயம் விருந்து போஜனாதி நடக்கும்.

குரு-புதன்-சந்திரன் சுபமாகில் வாந்தாநாள் பெற்றோர் வகை துக்க சோகாதிகளும் தன் சகோதராதிவகை சுபகல்யாண சந்தோஷமும் முயர்ச்சி பிறபல வெற்றிகளும் தென்மேற்கு வடக்கு இந்த திக்குகளால் விசேஷ தனலாபமும் காரிய சித்திகளும் பிறபலமான மேன்பாடுகளும் இஷ்டர்களால் மிகுந்த அனுகூல முண்டாகும்.

பாபராகில் பெற்றோருட னுற்றோரிவர் வகையாற் கலகம் களத்திர துக்காதிசோகம் விரயம் பலவகை யலைச்சல் மனதுக்கு கஷ்ட நஷ்டமும் தனதானியக் குறைவும் இருதயம் கண்ட மிவைகளில் நீர் சம்பந்த நோய் துன்பமுண்டாகும் பெருங்காரியவிக்ன ஸ்தானபேத வலைச்சல்.

குஜன்-சூரியன் இவர் சுபராகில் கலகம் நீங்கும் பகைசத்துரு ஜெயம் பொன்தனுதி வெற்றிகள் இஷ்ட காரியசித்தி இராஜாங்க மூலிய முயர்ச்சிகள் சிலவற்று கெடுதலடைந்து பின்கூடும் சகோதாம் பிதா பெற்றோர் இவ்வகை துக்கசோகாதி வருத்தம் தோன்றுமாம்.

பாவராகில் முயர்ச்சியாற் கலகம் அதி உஷ்ணம் நெருப்பிற்கு சமானமான நோய் துன்பம் வைராக்கிய கலகம் தனசீவனுதிக் குறைவும் வரும்.

குருதிசை ரவிபுக்தி யந்தர பலன்

மன்னவன் றனிலேஆதி வருந்தன தரவுகாரி
துன்னலர்பயமுங்கேடும் துலையலைந்திடுதல்வீணும்
மன்னவன்மாலோடைவர் வருஞ்சேயோன்புகரிற்கேடாம்
மின்னிடைமுன்னூர்கண்டம் விளம்புவோமற்பமாமே. 213

சூரியன் புக்தியுள் தனது சனி இராகு கேது இந்த அந்தாநாட் பல வலைச்சல் அகாலபோஜனம் உஷ்ணவியாதி பீடைபல கவலை சத்துருவாகும்.

குரு புதன் சந்திரனுல் சமலாபம் முயர்ச்சி கெட்டபின் அற்பங்கூடும் திடீரென்ற சத்துரு பயம் கலகமாகும் களத்திர புத்திராதி குடும்பங்கட்கு துக்க சோகாதி கவலை யுண்டாகும்.

சுக்கிரன் குஜன் இவாந்தாநாள் பலகவலையு முண்டாகும் மனதுக்கு கஷ்டம் ஓரவக்யாதிகளும் திடீரென்ற கலகம் நஷ்டம் எனும் பலவித விவாதமு முண்டாகும்.

சுபராகி லவரவர்களுக்குக் கூறியகேடு பலன்களிற் சமசவுக்கியமாக விரோதமுதலிய கெடுதலிருக்கினுமவைகள் பயம்போற்றோன்றி நீங்குமென்ப தறிக.

சனி பாம்புகளந்தர நாளுடையவர்கள் 6-8-மதிபதிகளின் நக்ஷத்திரத்தி லிருக்கிலிவ ரந்தரநாளில் பிற்பலமான ஓர் கலகமும் மோசமும் தன் ஆளே பரதேயங்களில் நகை நாணயாதி ஆபரணங்களை யெடுத்து மோசஞ் செய்வார்கள்.

சுபர் பார்வையாவது சம்பந்தமாவது இருக்கில் போனவை நாட். சென்றதின்பேரில் கூடுமென்பதாம்.

சந்திரபுக்தி யந்தர பலன்

மரையவன் றனிலே திங்க ளவன்றன தாவம்வெள்ளி
குரையுரும்பவமேலின்பங் கூடிடாப்பகையுந்துக்கம்
நறையுறுவைமதிப்பும் நிருபாற்றண்டமீவன்
மரையவனுடனேஐந்தும் மால்குஜனற்பக்கேடே. 214

சந்திரபுக்தியுள் தனதுசனிபாம்புகள் சுக்கிரனிவர்கள் சுபபலத்தோடிருக்கில் பலவகை கிலேசமும் நீங்கும் பழமையான பொருள் முதலியவைகள் பலவிகாதம் முதலிய வருத்தப் பாடுகளாலே கைகூடும் மிகமேன்மையுள்ள ஸன்மங்கள் அற்பமாகிவிடும் சுபகல்யாண சிலவுகள் நேரும் சீவனுதி முயர்ச்சிகளேனும் வியாபா ராதிகளேனு மிகு தொந்திரவு விவாதத்தின் பேரில் கைகூடும். ஒருவர்களின் சொத்து கட்கு பிணையுண்டாவதாலே மிகவும் கலகமும் கஷ்டமும் நேருமாம்.

பாபியாகில் மிகக்கேடு ராஜதெண்டனே பயம் பலவகை கிலேசமும் பந்து குடும்ப துக்கம் அகாரண பழிபாவம் கபஜெல ரோககண்டம் சோரபயம் சத்ருபயம்.

குரு புதன் குஜன் ரவி பாபத்துவம் பெற்றவர்களாக இருக்கிலிவர் அந்தரநாள் பலவகை துக்கசோகம் சோராக்கினிபயம் சிவில் கிரிமினல் விவாதம் உடனோர்களால் உண்டாகும் பலவகை கலகமாக நடந்துவரும்.

சுபபாவமாகில் பெற்றோர்வகை சுபகல்யாணமும் காரியசித்தியும் வரவேண்டிய பழயபொருட் கைகூடும் ஜெயமுண்டாம் வியாதி நீங்கும் புத்திராதி சிசு விருத்தியாகும்.

குஜன்புக்தி யந்திரபலன்

குருதனிற்சேயிற்சேய்மால் கூன்முடக்குறையோன்றன்னில்
பெருவகைகேடுநஷ்டம் பெண்வழி துக்கசோகம்
வரும்பலவிவாதமன்னர் வகையதாஞ்சுபமேலற்பம்
அருண்மதிகுருவும்வெள்ளி யாதிநற்சுபரேலன்பே. 215

அன்பொடுபணதிபாத்திர முயலுமடுத்திடுமென்னாலின்பம்
தன்வகைமணமாமேற்றிசை வடபாற்றனமொடுசீவிதமாகும்
வன்பகையசுபமுறிற் பலகேடுவாகனத்தாலுமேற்பீடை
இன்பமிற்கடனும்பலவித விரயமெய்திடுமிவன்றனக்கென்னே. 216

இந்த குஜபுக்தியில் குஜன் புதன் சனி இராகு கேது இவர்களில் குஜன் புதனுடைய நக்ஷத்திரத்தினும், சனி, ராகு, கேது, சூரியன், சந்திரன், செவ்வாய் இவர்களின் நக்ஷத்திரத்திலிருந்தும் புக்திநாதனிருக்குமிடத்து 6-8-11-3-வது இடத்திலாவது அதிபதியாகவாவது அல்லது மேற்கூறிய இடத்ததிபதிகளின் நக்ஷத்திரங்களிலாவது இருந்த எத்திசையும் புக்தியும் அந்தரங்களும், அந்த கிரகங்களிருக்குமிடத்துக்கு மேற்ற பலனை யளிப்பார்கள்.

1. மேற்கூறிய குஜன் புதன் சனி பாம்புகளிவ ரந்தரநாள் மேற்கூறிய விதிப்படியிருக்கில் துக்கசோகம் பிறபலகலகம் விவாதம் தனநஷ்டம் கடன் மிகவும் விரோதம் தேயபிருஷ்டம் அதிக உஷ்ணநோய் தவரிவிழுதல் காயம் இவ்வித நோய்த்துன்பத்தாற் கஷ்டமாகும் இராஜாங்க விரோதம் ஜீவன நஷ்டமாகும்.

2. சுபஸ்தானத்திதி ஆதிபத்தியம் சுபர்மித்துருகளின் நக்ஷத்திரத்திலிருக்கு மந்தரகாலம் மிகவு மேன்மையும் காரிய சித்திகளும் தனதானிய லாபம் பிறபலசுகம் ராஜஜீவனுதி கிருஷி வாணிபலாப வெற்றிகள் மேற்கு வடக்கு இவ்விட திக்குகளால் விசேஷ லாபமுண்டாகும் சுபகல்யாணம் நடக்கும்.

சுபராகிய குரு சுக்கிரன் சந்திரன் சூரியன் இவர் சுபபலமாகில் ஷை உத்தம பலன் சமமாகும்.

பாபமுரில் முன்பராவிற் கண்ட கெட்ட பலன்கள் நடக்கும்.

குரு திசை இராகு புக்தி அந்தர பலன்

சாலவேவிபொன்னிற்பாம்பு தனதொடுசேயோனுதி
பாலகர்மனையாள்பீடைபழந்த னங்குன்றுமன்றல்
ஆலமாம்விடத்தாற்பீடை யவர்சுபராகிலில்லை
ஓலமாமின்பமற்ப முற்றுவாழுழவோடாறே. 217

ஆரதாம்பொன்மீனன்வெள்ளி யருண்மதிசுபமேலின்பம்
நேரிடும்வாகனங்க ளுருபால்வலுவிற்செல்வம்
பேரிகையோகமாகும் பெண்ணொடுபேருமுண்டாம்
நாரியர்வலுவிற்சேர்வர் நலமிலேவிடருதானே. 218

இடருறுங்கரியோன்கேது இடம்விட்டுப்பகையுங்கூடும்
தடமுலைகலகம்துக்கம் தன்னவரிழிவர்நோயாம்
கடனதுமிகவுண்டாகும் கள்ளமிற்சுபமேயாகில்
புடமுனருரைத்தவெல்லாம் பூராவுமில்லைத்தானே. 219

இராகு புக்தியுள் தனது புதன் குஜன் சூரியன் இவர்கள் பாபமாகில் பல கஷ்டம் விஷசுராதி நோய் காற்று பயம் மனையாள் குடும்ப சாதக மிவர்களுக் குண்டாகும் பலவித கவலை துக்கம் விசனம் சோராக்கினி பயம் மானபங்கம் எழுத்து மூலியத்தால் தனநஷ்டமாகும் அதிகாரியால் பெருங் கலகம்.

சுபமாகில் மேலேகண்ட கெடுதல்கள் அற்பங் காண்பித்து நீங்கிவிடும்.

குரு சுக்கிரன் சந்திரன் இவர்கள் சுபபலனுறில் இவர் அந்தரநாளில் முயர்ச்சி வெற்றி சேரும் பழய வெற்றி தோல்வியடையாது ஜயம் சுபகல்யாணம் அனேக கிரக வாகனாதி கட்டிட லாபம் பிறபல சுபமாகும் அனேகவித நன்மை முயர்ச்சி ஜயமாகும்.

பாபமாகில் கற்பாதிகளா லற்ப சுகம் மனைவி துக்கம் குடும்ப கலகம் விவாதம் தன தானிய நஷ்டம் முயற்சி கைகூடி வாராது இப்படி நடக்கும்.

சனி கேது இவரந்தரநாள் முயர்ச்சி கெடும் பகையாகும் அபாண்ட கேசாகும் பலவகை நஷ்டம் அனேகவித நஷ்டமாகும் மோசத்தாற் கேடுண்டாகும் கால் சிர மிவைகளில் நோயுண்டாகும்.

சுபமாகில் அற்ப சுகமும் அண்ட ரோகாதி பீடையடைந்து நீங்கும் பகை ஜெயமுண்டாகும் சோரசத்துருவா லபகரிக்கப்பட்ட பொருள் கைக்குவரினும் பூராவும் அரிஷ்டிக்கப்பட மாட்டாது.

சனி திசை சுய புக்தி அந்தர பலன்

காரியிற்காரிதன்னுள் கடுநாகஞ்சேயிவ்வைவாரில்
தூரிடதலம்விட்டேகுந் துன்னலர்பயமுமுண்டாம்
வீரியங்குன்றுமுன்னோர் வெண்பொருட்கேடுண்டு
சீரிடாகுடும்பதுக்கஞ் சிறுவர்க்குகண்டந்தானே. 220

உண்டானசுபமேயாகி லுற்றதோர்தனநாசத்தால்
நன்றாகும்கன்மமெல்லா னல்வகையலைச்சல்தோன்றும்
பண்டானதனத்தினாலே பலவகைக்கலகமுண்டாம்
அண்டவன்பொன்மால்வெள்ளி யன்பொடுசுபமேற்சொல்வாய்.

சொல்லுபுரவிபுவிலாபம் செல்வர்தன்னாற்சீவிதமும்
நல்லோருறவாம்மணப்பேரும் நகையும்வாததனலாபம்

பெர்ல்லோர்மக்கண்மனைத்துக்கம் பொருளும்போகும்கலகமுறும்
சில்லோர்பின்னும்கதிர்மதிநாட் சேருஞ்சவமாய்செப்பியவே. 222

சனி தனது புக்திநாளுள் சனிசித்திரம் செவ்வாய் இராகு கேது இவர்கள் பாபஸ்தானதிபதிகளாகி பகை முதலிய கெட்டயிடங்களில் புக்திநாத னிருக்குமிடம் முதல்கொண்டு 3-6-8-11-லும் லக்கினவசாத் ஷஷ் இடங்களுக் கதிபதியாகவுமிருக்கி லந்தரநாளில் பலவியாதிதுன்பம கலகம் மோசங்களாலும் ஒருவர்களுக்கு யேற்றுக்கொள்ளுவதாலும் மானபங்காதி தனநஷ்ட முண்டாகுதல் பூர்வப் பொருளாலும் ஜீவன விஷயத்தாலுங் கலகம் சோரசத்துருபயம் அதிக விரயம் பந்து மூலியம் பெற்றோருட னுற்றோரிவர்களில் துக்க சோகம் அலைச்சல் குறைவான கலக பலனாகும்.

சுபராகிய மேற்கூறிய இடங்களைத் தவிர மற்ற இடங்களின் அதிபதித்துவம் ஸ்திதி இவைகளுடனிருக்கில் விரயப்பட்டாலுங் காரிய சித்திகளும் அலைந்து முடியும் பலகலகாதி விவாதம் ஜீவன வெற்றி நஷ்ட மடைந்தவைகளில் கஷ்டத்தின்மேற் கைகூடும்.

குரு புதன் சுக்கிரன் இவர் சுபமாயிருக்கில் அவரந்தர நாளில் விவாகாதிகுடும்ப புத்திரலாபம் வியாபாராதி பிரபல சீவன முயர்ச்சி கைகூடும் இஷ்டகாரிய ஜெயலாபம் பிரபு ஸன்மான வெகுமானமும் பெரியோர் நேசமும் நூதன சீவனமும் சுபமும் கிரகவாகனாதி விருத்தி ஸ்திரமின்றி நூதன முண்டாகும்.

பாபமாகில் இருந்தவைகளும் கெடும் கலகமாகும் பொருளால் நஷ்டம் பலகரை வருத்தம் தனதானிய விகாதம் இராசபயம் மானபங்கம் கலகம் குடும்பஸ்தி சிசுக்களுக்கு தேகபீடை துக்கம் அகால போஜன மாகும்.

சூரியன் சந்திரன் சமபலனாகவும் பெற்றோர்வகை யரிஷ்டம்நேத்திர கபநோயுண்டாகும் வெண் சிகப்பு வாணிபத்தால் நஷ்டமாகும் சீவனத்தை தானாகவே விடும்படியான மனவேசடையாம்.

சனிதிசை புதன் புக்தி அந்தரபலன்

முடவனிற்புத்திதன்னிடநாளும் மூர்க்கஞ்சேர்வக்கிரன்பாம்பில்
திட்டமதுகெடுமாய்பகைமனப்பயமும் சிறுவரோடரிவைவர்க்கரிஷ்டம்
குடதிசைவடவாற்றனம்பகைசோரங் கூடிடுமீளேநோய்க்கண்டம்
அடமிலாச்சுபமேலற்பமாம்காட்டி யமைந்திருமத்திமபலனே.

மத்திமமதிபொன்கதிர்புகர்நாளு மண்பொடுசுபபலனுரிலோ
சித்தியாம்பொன்னும்வாகனமடிமை திரத்தினோர்மணக்கப்பேறும்
உத்தமன்றன்னுற்றனமதுகூடு முயருமேற்கீர்த்திசெங்கோலும்
பத்தியாம்பரபலம்பவமெனிற்கேடு பயத்தொடுமுன்பலன்பகரே.

பகருமேகாரிசுரியநாகங்கள் பலத்துறில்முகுதனயோகம்
நிகரிலாமன்னர்சீவனயோகம் நிலைத்திலாவையுடன்வேண்டும்
அகமதிற்பரத்தோரவிவகைப்பொருளு மடுத்துடன்கூடும்பாவத்தேல்
தகத்தினிற்கேடுமன்பயந்தண்டம் தன்னவர்துக்கம்வருந்துமே.

இந்த புதபுக்தியுள் தனது செவ்வாய்கேது இவர்கள் பாவ பலனுறில் பலவகை கஷ்டம் துக்கம் உற்றோர்வகை நாசம் தன் வாக்கினுற்றுன் கெடநேரும் வியாதியும் மனைவி குடும்பம் இவைகளால் துக்கம் ஸ்தானபேத முண்டாகும்.

குரு சந்திரன் சுக்கிரன் ரவி இவர்களுள் சுபபலமுறும் அந்தரநாளில் மிகவு மன்னரால் யோகம் திடமொன்ற லாபம் கிடைக்கும் மிக மேன்மையுஞ் சுபமும் நடக்கும் பிறபல கீர்த்திகளும் சுபசோபனுதி மகப்பேறு தருமசாஸ்திராதி கல்வி ஜெய முண்டாகும் பிறபல பலனுகும்.

பாபமாகில் இருந்தவனுகூலம் கெடும் பகைநேரும் குடும்ப துக்கம் பொருள் விரையம் வீண் சிரும மலைச்சலுண்டாகும் கல்வி ஜீவனத்தால் துக்கமடைவன்.

சனி ராகு சுபபலனுகில் இவரந்தர நாளில் மிகுகலகம் விவாதம் அகாரணப்பழி பாதகம் வார்த்தையும் விஷநீர் சமானநோயும் குடும்ப உதவியர் துக்கமாகும்.

சுபபலனுறில் வாராதவைபோ லொற்றவைகள் கைவந்து கூடும் மிகவுமேன்மை ஸன்மானவெகுமானம் சுபசந்தோஷம் கீழ்ஜாதியோர் நீசராற் பிரபல செல்வங்கூடும். அவமானம் பெறினும் கீர்த்தியாக நடந்துவரும் என்பதாம் பலஸ்தலமேதமாம்.

சனி திசை கேதுபுக்தி அந்தர பலன்கள்

பங்குவிற்சிகியிற்றன்னுட் பகலவன்புந்திசேயும்
கங்குல்போற்பகைநோய்காட்டுங் கனகமும்விரயம்பெற்றோர்
தங்களுக்கரிஷ்டம்பொன்னேன் வெள்ளிநற்கதிரில்யோகம்
மங்களங்காரிபாம்பில் மனைமுதற்குடும்பநோயே. 226

கேது புக்தியில் தனசூரியன் புதன் செவ்வாய் இவர்கள் பாப பலத்துறில் குடும்ப துக்காதிநோய்காட்டும் பலகவலையுண்டாம் மன்ப்பயமும் அரிஷ்டமுந்தோன்றும் விவாதம் சீவனுதி கலகம் பலவித வாதமாகும் சகோதரம் பெற்றோர் இவர் வகை வியாதி நோய் கண்டமாகும்.

சுபமாகில் பலவித முயர்ச்சி தாமிதமும் அற்பலாபம் சமபலனும் மேற்கண்ட கொடுமைப் பலன்கள் நடக்காதென்றும்.

குருசந்திரன் சுக்கிரன் இவர் சுபபலனாகில் ஸமலாபமும் காரிய சித்திதாமிதத்தின் பேரிலுண்டாகும் என்றாக விரயம் சுபமூலமாக உண்டாகும் குடும்பசுபமும் சுடும்பாதி வகையில் சமலாபமாகும்.

சனி இராகு இவர் காலததில் அதிக விவாதம் பொருள் நஷ்டம் தனதானியக் குறைவுமனைவருத்தம் உஷ்ணவாயுநோய் துன்பமும் பலகவலையுமிவ்வித பயமாக நடந்து வரும்.

சனிதிசை சுக்கிரபுத்தி அந்தரபலன்

மந்தனிற்புகரோன்வருந்தன தாவுமந்தனுமிவர்பவமெய்தில்
சந்ததங்கேடுமனையவட்கரிட்டந் தான்வரும்பகைமனத்திடரும்
கந்தநற்குழலியார்தனற்குறைவுங் களவொடுதேயமாமலைச்சல்
சொந்தமும்பகையாஞ்சுபமெனிற்சமமாய் சொல்லிடுமுன்வைபலனே.

பலமுருகதிர்சேய்சிகிசுபமெய்திற் பகைதனல்சாலமுஞ்செயமும்
தலமதுவிடுமாம்பலமுறைபாலுந் தனம்வரும்பகையெனிற்கேடாம்
நலமுரும்பொன்மால்மதிவருநாளில் நற்றனங் கூட்டுறவாவர்
கலகமும்போமாம்வாணிபமன்னர் கைத்தொழிலாலுநற்பலனே. 228

இந்த சுக்கிரன் புத்தி தனது இராகு சனி இவர் பாபராயிருக்கில் இவாந்தர காலத்தில் களத்திரபுத்திர குடும்பாதிதுக்க சூதகம் எனும் ஓர் பெரிய கலகமேனுங் கூடும் முயர்ச்சி கெடும் பல ஸ்தல வலைச்சல் வெண்மை கருமை நிறவியாபார நஷ்டமேனும் பெரும் விவாதமேனு முண்டாகும் சோரம்போல் நஷ்டமாகும்.

சுபமெனில் சுபலாபமும் சுபசோபனாதி சுகமென்னும் டம்பவகையால் பொருளதிக விரயம்பின் கஷ்டம் மனத்துயரம் நீங்கும்.

சூரியன் செவ்வாய் கேது பாபராகில் சோரம் அரசர் அக்கினி இவைகளாற் பலஹீனம் தனநஷ்டம் சோகமும், குடும்ப வியாதி பகை கலகம், மத்திமபலனும் போனவிவாதம் திரும்பிவந்து வாதிக்கும் சகோதிராதி பெற்றோர்வகை சோகமாகும்.

குரு-புதன்-சுக்கிரன் இவர் சுபபலனாறில் முயற்சி ஜெயம்-கல்வி முதலிய ஜீவனத்தால் மிகமேன்மை பிறபலகீர்த்தி ஸன்மான பொருமானமும், நஷ்டமான பொருளுந் தனமும் கிடைக்குதல், மங்களசுப சோபனமும், மிகவு மேன்மைகளும்.

பாபமாகில் நஷ்டமும் பெண்மூலிய குறைவும், சில வதிகம், நாமகுறைவு அதிகமான ஸ்திரீலோலநோய், ஸ்திரீபுத்திராதி சிசு, இவைகட்கு நோயும் இராஜாங்க மூலிய விவாதம், கலகம், இவ்வித பலனுகும்.

சனிதிசை சூரியபுக்தி அந்தர்பலன்

கதிர்மகள் தனிலேவெய்யோன் கதிர்பணிசேயின்காலம்
பதியினிற்பிணியினேடு பற்றுளோர்கலகம் நஷ்டம்
துதியிலாச்சுபமேலற்பஞ் சூழ்தனவழக்குமேலாம்
சதிபொருற்றோர்மன்னர் தன்னினுலற்பமாமே. 229

தன்னதாம் பொன்மால்வெள்ளி சசியினிற்சுபமேலின்பம்
மன்னவராலுஞ்சேரும் வழக்கினுல்வெல்வன்றேய
நன்வகையின்பமேலா னற்றனவாகனங்கள்
கன்னாற்கலகநோயுஞ் சுற்றுவன்றேயம் என்னே. 230

சூரியன்புக்தி தனது பாம்புகள் செவ்வாய் இவர் பாபாதிபரா யிருக்கில் குன்மம் முதலிய குடல் நோய்களும் திடீரென்ற கலகம் ஆபசார நடவடிக்கைகளும் பலவித மயக்க போஜனம் குடும்ப துக்க முண்டாகும் சீவன கிலேசமாம்.

சுபராகில் காரியங் கைகூடும் பகை நீங்கும் ஜெயமுண்டாகும் மத்திம பலனுகிலும் கெடுதல் முதலிய விரயங்களின்பேரில் ஜெயலாபம் அடைவன்.

சுக்கிரன் புதன் குரு சந்திரனிவர் சுபராகில் அவராந்தரநாளில் சுபசோபனம் அற்ப விருந்தும் மத்திம சுகம் இறவல் வாகனுதி பொருளனுபவம் உண்டாம்.

பாபராகில் அதிக விக்னம் நன்மை யோர்பகை யாவர் விரண நோய் பெண் முதலியவைகளாற் குறைவு பகையும் பெற்று சூநகதுக்கம் கடன் முயற்சிகெடும்.

சனியில் பித்தவாதநோய் கெட்டமார்க்கபிரவேசம் சித்தபேதம் பலவகை யரிஷ்டம் கலகம் குடும்பதுக்க சூநகம் பலரை ஏமாற்றும் விஷமான கெட்டபெயரை எடுப்பன் ஸ்தானபேத முண்டாகும்.

சனிதிசை சந்திரபுக்தி அந்தரபலன்

மருவியகாரிதன்னில் மதிதனதரவுவெய்யோன்
உறும்பவம்பகைக்கிலேசம் உற்றவர்துக்கம்நோயும்
தருபொருட்சீவிதங்கள் தட்டுமேவிரயமாகும்
பெருமையாஞ்சிபமேலின்பம் பெருமுனமடைந்துபின்னே. 231

பின்னதாம்பொன்மால்தன்னிற் பெற்றிடும்கல்வியின்பம்
மன்னரால்மேன்மையோங்கும் வழக்கதுவெல்வன்வேழ்வி
அன்னேதன்வகையாலின்பம் மாகிடும்பவமேல்மத்தி
தன்னதாம்காரிவெள்ளி தரையிஞேன்கேடுதானே. 232

கேடுரும்பகையுமின்பம் கிளைவழித்துக்கமேலாம்
பீடுரும்பெண்ணுற்கேடு பிறபலச்சுபமேலாகில்
நீடிடும்கன்மங்கூடும் நீள்வணிமணப்பேரின்பம்
கூடிடுமினத்தால்வெற்றி குருவருள்மணவாழ்வாமே. 233

சந்திரன்றனது பாம்புகள் சூரியன் இவர்கள் பாபாதிபத்தியம் பெற்றவராக இருக்கில் அவர்களினந்தர காலத்தில் பலவகை கலகம் கபசுராதிநோய் துன்பம் மனக்கிலேசம் அசனசயன குறைவும் சீவனுதி முதலிய நஷ்டம் விஷமல்லது ஜெய பலமும் இவைகள் தனக்கேனும் சிசுகட்கேனு முண்டாகும்.

சுபராகில் பெண்மாதுரு இவ்வகையால் சீவனுதி தனலாபமும் ஜெயமும் வெண்மை கருமை நிற வியாபாரங்களால் முன்கெட்டும் பின்லாபமும் பழய பொருளால் விகாத மனஸ்தாபமும் இவ்வித மத்திம பலனுண்டாகும்.

சனி சுக்கிரன் சுபபலமுறில் மனை முதலிய பாபோக இன்பமும் நல்லகந்த புஷ்பாதிசுகமும் கூட்டங்களால் நல்ல பெயருண்டாகும்.

பாபராகில் ஜாதகன் மனைவி இவர்கட்கு தேக நோய்த் துன்பம் பலவகை வருத்தமும் சூதகாதி துக்கம் பெற்றோருக் குண்டாகுமென்றறிக சீவன மல்லது முயர்ச்சிகள் ஒன்றுவது ஸ்திரமில்லாது வருத்தமும் கலகம் விவாத முண்டாகும்.

குரு புதன் இவர் சுபபலமுறில் ஞானுதி கல்வி வெற்றி ஜெய சித்தி மேன்மைகள் தனலாபம் பிரபு சன்மானம் தனலாபம் நூதனயிடம் பொருள் ஏவல்கள் ஸ்திரமின்றி யுண்டாகும் கலகம் நீங்கும் விவாதவகையால் மிகுலாபம் சுபமங்கள குடும்ப லாபவிருத்தியாகும்.

குஜன் அந்தரநாளில் மனக்கோபம் கலகம் குடும்ப வகையால் பல கலகம் ஞாதி முதலிய துக்கசோகம் ரத்தநோயரிஷ்ட முண்டாகும் மத்திம பலனாகும்.

சனி திசை குஜன் புக்தி அந்தர பலன்

அந்தமிற்காரிசேயிலவன்மதி புந்திவெய்யோன்
முந்தியபாவனுகிமுகம்விழி நோயும்பக்கம்

இந்துபோலுற்றோர்போவர் இயன்பிறம்பழியும்நட்டம்
வந்திடுஞ்சுபமேற்பீடை வந்துடன் நீங்குமாதே. 234

மாதவன்புகரோன் றன்னில் மனமதுவதுவாற்கண்டம்
மீதிலாரவியமாகும் மிக்கவர்கொடுஞ்சோற்றுன்பம்
சாதகன்றந்தைவர்க்கு தன்னினுக்கரிஷ்டமாகும்
சேதவன்பாம்பிற்றீய்மை செய்யினுஞ்செயங்கள்தானே. 235

குஜன் புக்தியில் தனது சந்திரன் ரவி புதன் இவர் சுபபலமாகில் லாபமுமின்றி கேடுமின்றி மத்திம பலனுகும்.

பாபமாகில் பெற்றோர் வழிதுக்கம் கலகம் உடலிற் பலநோய் சாட்டியத்தால் முயர்ச்சியை கெடுத்துவிடும் விரய மதிகமாகும்.

குரு சுக்கிரன் சுபமாகினும் பாவமாகினும் எவ்விதபலனுந் தீர்க் கம்பெறுது ஸமசுகமாகும் காரிய காலதாமிதமாகும் பகை நீங்கும் வியாதிகள் உள்ளூற வரிஷ்டிக்கும் முயர்ச்சியினுற் சமபலமாகும்.

சனி பாம்புகள் இவர் சுபராக வாழில் கலகமுண்டானவை செய மாகும் கெட்ட முயர்ச்சியாற் பிரபலக்கேடின்றி சமமாக வடைவன் பிறராலனுகூலம் பெருவன் மத்திம பலனுகும் சகோதரமலது பெண் ஜாதிவகை துக்க கிலேச முண்டாகும் இதா கருமங் கைகூடும்படி நேரிடும்.

சனி திசை இராகு புக்தி அந்தர பலன்

நீலனிலரவுதன துசேய்முடவன் நினைத்தவைகூடிடாப்பகையும்
இலத்திணுற்பயமாமிடிக்கமுமன்னுல் இலையெனப்பறந்துமேதிரிவன்
குலத்தடையாகும்சுபமெனிலற்பங் கூடிடும்சமபலனதுவாந்
தலமதுபேதம்பின்தனலாபம் சசிகதிர்பணிசமபலனே. 236

பனிகுருவெள்ளிபுக்திறற்சுபரேல் பலதனவாகனமடிமை
அணுகளுமணமும்மகவோடுவின்ப மாசாற்சீவனவெற்றி
துணிமுதற்கூடும்வாணிபமுறையுஞ் சூழ்ந்திடுங்கீர்த்தியாங்கல்வி
மணிவகைசேரும்பவமெனிற்கேடு வருஞ்சமபலனதாயுரையே. 237

இராகு புக்தி தனது சனி குஜன் இவர் பாபஸ்தானுதி பத்தியங் களுடன் பகையோர் நக்ஷத்திரமுறில் பகை வரும் மன்னரால் விகா தம சன்னியாசித்துவம்போல வெருப்பும் பல புக்தி பேதம் உரோ காதி பயம் அலைச்சல் இராஜதெண்டனுகி குடும்ப துக்கசோகமாகும்.

சுபராகில் ஷெடி சொல்லியவைகள் சொற்பமாக காண்பித்து நீங் கும் பகையினுலும் மன்னராலு மிடுக்கம் கடனுளிகளின் றுன்பங் களாலுந் தலைமறைவு தனநஷ்ட முண்டாகி நீங்கும் பலவித பய மாகும் சுகமில்லான்,

புதன் சுக்கிரன் குரு இவர் சுபாதிபராகி மித்துருக்களினால் நட்சத்திரமுறில் காரிய ஜெயமாகும் வாகனாதி லாபம் பகை விவாதம் கெட்டுப்போன பொருள் சீவன லாபவெற்றி பலவகை விரயம் மணம் மகப்பேறு முதலிய இன்ப பலனும் மிகமேன்மையு முண்டாகும்.

பாவமாகில் முயற்சி கெடும் தேசம் ஜாதி முதலிய பேதம் பல அகிருத்தியம் விவாதம் பெண்பெந்து இவர்களாற் குறைவும் அநேக வகையான மோசத்தால் பொருளழிந்து திரிவன்.

கேது சூரியன் செவ்வாய் இவர் சுபமாகினும் பாவமாகினும் சுராதி ரக்தநோய் துன்பம் பலகலகம் மனக்குற்றம் விரயமதிகம் கடனால் வருந்துதல் பலவித வாதம் ஜாதிவகையார்களால் தனநஷ்டம் கலகம் இவ்வித மத்திம பலன்க ளடையப்படு மென்பதாம்.

சனி திசை குரு புக்தி அந்தர பலன்

ஆனதோர்சனியிற்பொன்னோ னவர்தனதழலும்வெய்யோன்
தானமில்லசுபராகிற் றனையரோடரிவைகண்டம்
மானமுமிடராம்வெற்றி மன்னராற்குறைவுண்டாகும்
வான்சிகிபுகரிவ்வாகும் வருஞ்சுபஞ்சமமதாமே. 238

ஆம்வகைப்புந்திகாரி யாவுமேசுபமேலுற்றால்
நாமமுமிகுதிசெங்கோல் நால்வகைப்பொருளுமின்பம்
காமமாமனைவிபோகங் கருதியமன்னால்லாபம்
தாமவர்சேர்வர்கீழ்மேற் றனமதுகூடுமாதோ. 239

மாதெனும்மதியும்பாம்பின் மத்திமாட்பகையுந்துக்கம்
தீதுருமங்கைவர்க்கஞ் சேதமாமுயிர்க்கண்டங்கண்
போதவேசுபமேல்நீங்கும் புகழ்வரும்வெற்றிகூடும்
வாதமுஞ்செயமுண்டாகும் வாராதமுயற்சிவாழ்வே. 240

குரு புக்தி தனது சூரியன் செவ்வாய் இவர் பாபாதிபராகில் சீவனக்கேடு அதிக நஷ்டம் கலகம் பகைமனத்திடர் துக்கம் குடும்பம் பெற்றோர் சகோதிரர் இவர் வகையாற் பல கிலேசம் மனக்கஷ்டம் தன நஷ்டம் கடனால் பரதேயவாஸம் பழய பொருட் கேடும் பெண் வகை யாதரவு அடைவன் புத்திராதி சோகமுண்டாகும்.

சுபாகில் முயற்சி தாமிதம் வியாபாராதி பல முயற்சிகட்கு ஆரம்பமாவன் குற்றப் பெயர் நீங்கும் சீவனம் பிறபல வெற்றியாகும் சுபகல்யாணாதி விரயமாம்.

புதன் சனி இராகு சுபபலமுறில் இராஜாங்கவெற்றி ஜெயம் போன ஜீவனாதி முயற்சி மேகம்போற் கைகூடும் பிறபல ஜெயமுண்

டாகும் சுபயோகாதி மேன்மையாம் வடக்கு தென்மேற்குகளாற் செய முயற்சி பிறபல லாபம் வரும் மோசப்பொருள் பழய கடன் வரும்.

பாவராகில் பகைவரும் தீராத கெட்ட பெயரும் கலகமும் தன நஷ்டம் மனப்பயம் சோரசத்துருவால் நஷ்டம் விவாதம் ஜீவன பங்க முண்டாகும்.

சுக்கிரன் கேது தனது அந்தரநாள் பலன்போலாம் பெண் போகாதி விசேஷமாகும்.

சந்திரனும் பாம்புகளின் சில பாகமான அந்தர நாளிற் கலகமும் பொன்னுபாணுதி தனநஷ்டமும் பலவகை கஷ்ட நஷ்டமும் பெற்றோர் சகோதரம் இவ்வகை துக்கசோகாதிகள் கலகம் அலேச்சல் உயிர்த்திணையாகவும் மிகவுங் கீர்த்தி பெற்றவர்களாகவு முற்றவர்களுக்கு பலகுறை துக்கசோக முண்டாகும்.

சுபராகில் மேற்கண்டவைக ளற்பமாக வுண்டாகி நீங்கிவிடும்.

புதன் திசை புக்தி அந்தர பலன்கள் தனது புக்தி

புந்தியிற்றனதுபுக்தி புலவனும்மதிபாம்பாதி
சிந்தையாமசுபத்தாலே திரவியவிரயம்பெற்றோர்
தந்துணைமுதலோர்நோயாந் தன்வகைச்சூதகங்கள்
பந்துவாற்கலகங்கூடும் பலமிலாச்சுபமேன்மேலே. 241

மேலெனுஞ்சமமதாகும் வெள்ளிபொன்கரியின்ளுளில்
சேலெனும்விழியாளின்பம் திடமுடன்சீவனங்கள்
கோலமாந்தீர்க்கமில்லான் குணமுடன்மணப்பேரின்பம்
பாலகரின்பந்தீதேல் பகைமனத்திடராமன்னே. 242

மன்னரான்முயர்ச்சிக்கேடு வாணிபநஷ்டமாகும்
அன்னையர்மனையாள்துக்கம் ஆதியுஞ்சேயிற்றீதாம்
கன்னலார்துக்கம்நோயுங் கனதனநஷ்டமாகும்
இன்னதாஞ்சுபமேலின்ப மிடர்வந்துபோகுமென்னே. 243

இந்த புதன் தனது சந்திரன் பாம்புகள் பாபபலத்துடனிருக்கில் பெற்றோர்வகை துக்கம் வாணிபாதி ஜீவனக்கேடு இராச மூலிய சீவனத்தாற் கலகம் பயம் ஸ்தானபிருஷ்டம் தனதானிய நஷ்டமாகும் தேகத்தில் நோயுண்டாகும் எழுத்து மூலியத்தாலே கலக முண்டாகும்.

சுபமாகில் மேற்கூரிய கலகம் துன்பம் முதலிய கஷ்டபலனக ளுண்டாகி நிவர்த்தியும் அதிக விரயம் வியாபாராதிகளில் ஒன்றில் லாபம் போற்றேன்றி ஒன்றில் நஷ்டமுண்டாக்கும்.

சுக்கிரன்-குரு-சனி இவர் சுபமாகில் வெண்மை கருமை நிற வியாபாராதி வடமேற்கு தென்கிழக்கு திக்குகளினுல் விசேஷலாபம் தேவதாபிரார்த்தனை முடிவு இஷ்ட காரியசித்திக ளத்திராதிரோக நிவிர்த்திகளும் சுபகலியாணுதி விருந்து போஜனம் சத்துருஜெயம் பிறபல சுகம் புத்திராதிபலம் இராசகாரியாதி ஜீவனங்கீர்த்தி பிறபல வெற்றியாகும் மிகமேலான நாமமுண்டாகும்.

பாபாதிபராகில் மிககலகம் ஸ்தான பிருஷ்டம் இராஜபயம் கல கம் முயர்ச்சிகெடும் பிறபுக்களே விரோதிகளாவார்கள் பலவகை கஷ்டநஷ்ட முண்டாகும் கடனுளியாகுதல் பலயிடமலைந்து திரிகுத லாகும் இராச தொண்டனைகள் உண்டாகும்.

குசன்-சூரியன்-இவர் காலம் இரத்தக்கடுப்பு மூலநோய் சுராதி பாதை களத்திர புத்திர கும்பாதிகட்கு முண்டாகும் பலவகை வருத் தம் பந்துகிலேசமாம்.

புதன்றிசை கேதுபுக்தி யந்தரபலன்

வணிகனிற்சிகியின்றன்னுன் மந்தன்சேய்கதிர்பாவத்தால்
துணிவுருங்கருமத்தாலே துயாமுமுயல்வுகேடாம்
பணிகுவர்தன்னுற்கட்டம் பலதனவிரயம்நோயும்
குணிதமாஞ்செவிகண்ணேயுங் கொள்ளுவன்சுவமேநன்றே. 244

நன்றெனும்பொன்னேன்புகர்மதிபுலவன் நாளிநிற்சுபபலத்தாலே
கன்றேருடுபுவியும் வாகனவடிமை சுனதனவாதவெற்றியுமாம்
மன்றலம்புகழுமசுபமேற்கேடு வந்திடும்நற்வகையாலும்
வென்றிடும்வழக்குமின்பமுமணமு மிகுத்திடுமன்னர்பூசிதமே. 245

கேதுபுக்தி தனது சனி-பாம்பு-சூரியன்-குஜன் இவர் சுபபலமா கில் சமசவுக்கியம் முயர்ச்சிகள் தாமிதானி கூலம் பலகலகத்தின் பேரில் தனலாபமும் பகை முதலிய கஷ்டம் நீங்கும் பிருக்காக செய் யும் நிந்தனைகளால் அற்பசுபமாவன்.

பாபமெனில் நன்மைகள் தீமையாகும் இடம் விட்டனுச்சலாகும் மிகு அனுகூலிகள் விரோதம் குடும்பதுக்கம் பலவகை கஷ்ட நஷ்ட மும் தாமெருதேயமும் பெற்றூருற்றூர் ஓர் தேயமுமலைவார் நாண யக் குறைவும் கடனுல் வாதம் ஈமக்குறைவுண்டாகும்.

குரு-சுக்கிரன்-புதன்-மதி சுபாகில் இவரந்தாநாள் பலதனமு யல்வு நேரும் கலகம் நீங்கும் நஷ்டமான கைகள் திரும்பப் பெருவன்

விரய மதிகமாகும் குடும்பசுபசோபனம் நடக்கும் நல்ல லாபத்தினல் அலேந்து திரிவன் இராஜர் கல்வி இவைகளால் வெற்றியும் சீவன லாபமும் பெருவன்.

பாஜமாகில் களத்திர புத்திராதிதுக்கமுண்டாகும் பகை நீங்கும் மன்னர் மூயல்வினுற் கெடுதலும் பயமுமாம் அனுகூலத்துக்கு முயல் தன்னையறியாது கேடுவரும் புத்திபேதமாகும் கல்வி முதலிய முயர்ச்சியாற் கேடடைவன்.

புதன் திசை சுக்கிரன் புக்தி அந்தரபலன்

கணக்கனிற்புகரோன் றனதுடன்காரி கரியபாம்பிவர்பவமுற்றால்
பிணக்குடன்வாதைமன்பகைநோயும் பிறபலக்கேடுசெங்கோலால்
வணக்கமிற்றுக்கம்வந்திடுஞ்சுபமேலற்பமாம்பகைமனத்திடரும்
குணமதாமனைவிமகம் பெறுஞ்செயமுங் கூடுதல்சமபலன்கூறே. 246

கூறிய பான்மால்மதிவருஞ்சுபமேற் கொற்றவர்தனஞ்சுபமணமும்
நேறிடும்புவிகள் வாகனலாபம் நித்தியபோகமேவின்பம்
வீரியமுண்டாம்பரதிசைசெல்வன் வீணசுபத்திடையாகில்
தீதிலோநோயும்மனைமகிலேசம் சிலவதிகத்தினற்கடனே. 247

கடனுறும் பருதிசேய்பணிபவமேற் காலனுற்பயமுடன்பிணியும், திடமிலாமெண்ணங் கோலினுற்பயமுஞ் சிரத்தினிற்கடியநோய் காட்டும், வடதிசையலைச்சல்மானமும்பகையாம் வன்சு பமாகிடின் முன்பானடவுறவுரைத்தமொழியனுகயர்வாய் நாட்டிய கணிதநூலில்.

சுக்கிரன் புக்தியுள் தனது இராகு சனி இவர் பாவராகியிருக்கில் பகை, மன்னராற் றெண்டனுதிபயம், பெண்வகையால் மானபங்காதி பொருட்சேதம். பிணிவாதை, முயற்சிகெடும் பெற்றோர்வகை, துக்கமுண்டாகும்.

சுபராகில் குறைகள் வந்துதீரும் பகை நீங்கும் விரய மதிகம் ஸ்தான பேதத்தா லற்பசுகமாகும் ஸ்திரீபோகாதி யின்பமாகும்.

குரு-புதன்-சந்திரன் சுபராகிவரில்; இவரந்தரநாள் மணம் மகப்பேறு ஜெயம் மன்னரால் ஜீவனுதிவெற்றி பிறபல சுகம் தனதானியாதிகளும் வெண்சிகப்புநிற வியாபாராதிகளும் வெற்றியும் கல்விவித்தை இவைகளால் ஜெயமும் சுபமங்களம் ஸ்திரீபோக சுகமுமாகும்.

பாபமாகில் மேற்கூறிய ஒவ்வொன்றினுலும் நஷ்டம் குறைவு துக்கம் பொருள்சேதம் அதிகவிரயம் பலவகை மனஸ்தாபம் துக்கப்

பலனுகும் வியாதியரிஷ்ட முண்டாகும் உற்றூர் பிரபு இவர் பகையும் எழுத்து மூலியங்களாற் பெருங் குற்றமாகும் அடுத்தோர் கெடுப்பர்.

குஜன்-ரவி-கேது இவர் காலத்தில் பெண் முதலிய போகவதை யால் பிணிநேரும் குடும்பம் ஞாதியிவரால் விவாதம் தனநஷ்டம் புத்திர களத்திராதி துக்கசோகம் மிகவும் வியாதி துன்பம் பலவித கஷ்ட நஷ்டம் கோபத்தால் முயர்ச்சி முதலியவைகள் கெடும் கடனுண்டாகும்.

புதன்றிசை சூரியன் புக்தி யந்தரபலன்

பனிமகன்றனிலேசெங்கதிர்தனதும் பங்குபாம்பிவர்வரும்பகையால்
தனியதாயலேவன்பிணிபலதுக்கம் தந்தையர்வகைதனக்கரிட்டம்
கனிமொழிகண்டம்மன்னர்சீவனத்தாற் கனதனநஷ்டமாஞ்சுபமேல்
இனிநெனவற்பமகிழுடையின்ப மிணகிடுமுன்வைக்கியம்பே. 249

இபம்பிடுபுந்திபொன்புகர் சேயொனிந்துவுஞ்சுபமெனிலற்பந்
தயவுடன்மன்னர்சமத்திடைலாபம் தான்வரும்பாதலவலேச்சல்
கயவராற்பகைபோம்பிணிசிசுகண்டங் கண்டபின்நீங்கிடுபலனு
மயர்விலாதாகும்சுபமேற்றீதா யடைந்திடுமவ்விதப்பலனே. 250

சூரியன் புக்தியுள் தனது, பாம்புகள், சனி இவர்சுபராகி யிருக்கில், பலவிதமூலம் சிரநேத்திர நோயும், குடும்பாதி பெற்றோர் வகைகட்கு மரிஷ்டிக்கும் இராஜ விட்வரம் விவாதம் பழய பொருளால் கலகம் கருமைபலநிற வியாபார முயர்ச்சிகளால் தனநஷ்டமும் சோராக்னிபயமாம்.

சுபமாக யிருக்கில், முன்கூறிய தீங்குகள் வந்தகலும் மத்திம பலனுகும் மற்றொருவர்களால் முயர்ச்சி கைகூடும் திடீரென்ற தனநஷ்டமற்பங் கைக்கு வருமாம்.

குரு, குஜன், சுக்கிரன், புதன், சந்திரன் இவர் சுபமாயிருக்கில் இவர்களின் அந்தரநாள் பந்து கூட்டுறவு, கீர்த்தி, வெற்றி, இராஜாங்க சீவனுதிகள் கைகூடும், மிகவுமேலான இன்பமுண்டாகும் பிறபல வெற்றியு மேன்மையுங் கிடைக்கும், அலேச்சலுஞ் சமலாபமாம்.

பாவராகில் பகை, பிணி, புத்திராசிசு, களத்திராதிகட்கு நோய் பகை காட்டும் முயர்ச்சித்த வாணிபம் பகையாற்கெடும் பலன் தாது நகை நாணயாதி நஷ்டமாகும் பந்துவருக்க க்லேசமாகும், மிக உதவி புரிபவர் நீங்குவார்.

புதன்றிசை சந்திரபுக்தி யந்தரபலன்

புந்திமதியிற்றனதாவம் புகழும்போகும்கன்மமுடன்
வந்தபொருளுங்கைதவரும் மன்னர்பகையாம்பலவாதம்

சொந்தவகையிற்சூதகமாஞ் சுன்னேடாரல்சுகமில்லான்
கந்தகனகன்புகர்புந்தி கதிரிற்செல்வங்காட்டிடுமே. 251

காட்டுஞ்சுபரேற்றனலாபங் கதித்தமன்னர்தன்னுறவால்
விட்டோடாடையாபரணம் விவகாரத்தாற்செயம்பெருவன்
தீட்டுமகவுமமணப்பேறுஞ் சேருஞ்சுபமேற்றீதறப்பங்
காட்டிமறையுங்கரிசேயிற்கலங் காட்டும்பின்குணமே. 252

இந்த சந்திரன் புக்தியின் தனது இராகு, கேது இவர் சுபராயி ருக்கில், பலஸ்தல சஞ்சாரமும் அதிக விரயம், சோரங்கள் பான விடத்திற் பொருள் விரயம், மனதுக்கு வருத்தம் மத்திமபலனுதும்.

பாபாதி பத்தியமாகி யிருக்கில் வீணிற்றேச சஞ்சாரம், கலகம், குடும்பத்துக்க சோகாதிகள் மனதுக்கு வருத்தம் அலேச்சல் புகைச் சல் முதலிய இருதயரோயாற் கஷ்ட பலனுகும்.

குரு-ரவி-சுக்கிரன்-புதன்புக்தி நாதனுக்கு நல்லோராசியும் லக் கினவசாது நன்மையான கேந்திரகோணுதிபத்திய ஸ்திதியி லிருக்கி லும் மிக மேன்மையான யோகசெல்வமும் இராஜாதி பத்தியமும் வெகு நாளாக கெட்டுப்போன பொருள் ஜீவனுதிகாராதிகளும் ஆச் சரியத்துடன் கைகூடும். சுபகல்யாணுதி புத்ரலாபமாகும் இராஜ ஸன்மானம் கல்வி செயகீர்த்தியு முண்டாகு மென்றும் அறிய வேண் டியது.

பாபாதிபராக இருக்கில் இவரந்தாநாளில் தனச்சேதமும் பழப கடனுல் அடிக்கடி வாதையுண்டாகும். வராததுன்பம்வரும் லாபத் துக்கு உத்தேசித்து நடத்தும் வகைகள்கெடும் விவாதம் பகை குடும் பங்களத்திரத்தினுக் கேனும் நல்ல வயதுடைய புத்திரர் பெற்ருேரி வர்கட்கேனும் தேகாரிஷ்ட துக்க முண்டாகும்.

சுபாதிபத்தியஞ் சிலதும் பாபாதிபத்தியஞ் சிலதுமாகில் மேற் கூறிய பலன்கள் கலந்து நடக்கும். பலமுறை துறையான வியாபார முயர்ச்சியுங் கூடினுங் கடையில் நன்மை யடையாதுகும்.

குஜன் சனி இவரந்தரநாள் கபவாத நோயும் சோராக்கினி பய மும் வீணில் நஷ்டமும் அவக்யாதிகளும் பலவகை பந்து சிசு துகக சோகதிகளும் புத்திக்குறைவும் உண்டாகும் சுபராகவிருந்த காலத் தில் மேற்கூறிய கெட்டபலன்கள் அற்பமெனுங் காண்பித்து நீங்கி னும் விசேஷலாப மிராதென்றறிய வேண்டியது.

புதன் திசை குஜன் புக்தி யந்தரபலன்

அரும்புதன் றனிலேசேயி லவன்றன தாதிபாம்பு
வரும்பவபலனேற்றீதா மற்பமாம்பலனேயியர்
தருஞ்சுபஞ்சமமாவெற்றி தன்வகைதுக்கம்தோன்றும்
கரும்புபோன்மொழியினுட்கு காணுமேபிணியாற்கண்டம். 253

கண்டமாம்புகர்காலாகுங் கனதனவிரயங்கோனல்
குண்டணிமிகவுண்டாகுங் குருபதிசுபமேலின்பம்
வண்டணிகுழலிபோகம் மணப்பேறிமன்னுற்செல்வம்
கொண்டிடுமேன்மைபாபங் குருகிடும்வெற்றியெல்லாம். 254

இந்த குஜன் தனது பாம்புகள் சூரியன் இவர் பாபமாகியுறில் பலவித வாதம் பகை தன நஷ்டம் ஜீவனத்தாற்கேடு கும்பகுலேசம் விஷஸமானுதி பீடை வணகிரி சஞ்சாரம் பெற்றோர் சோகமாம்.

சுபராகி யிருக்கில் சமலாபம் முயர்ச்சி கெட்டபின் அற்ப மேன்மை விரய மதிகம் சத்துருசெயம்.

குரு சந்திரன் சுபராகில் எண்ணுதவையும் வரும் பகை நீங்கும் வெற்றியும் இராசமூலமான மேன்மை பெருவன் கல்வி வெற்றியால் லாபமடைவன். பலருக்கதிபதியாவன் பாபாகில் தனவிரயம் கடன் பகை அலேச்சல் மிகப் பிரியமானபொருள் சீவனம் கைவிடுதலுமாகிய துக்கபலனும்.

சுக்கிரன் புதன் சுபராகில் ஞானுதி கல்வியறிவுண்டாகிக் கெடும் பலவித ஸ்திரமில்லாப் போகமாகும்.

பாபியாகில் பெண் சகோதரவகையால் துக்கம் பகை குறைவு தனநஷ்டம் சோராக்கினிபயம் ஜலம் ரோக மிவையாற் கண்டம் பல விதவாதமும்வந்து துறத்துமாம்.

புததிசை இராகு புக்தி யந்தரபலன்

புந்தியின் றிசைபாம்பவர்தனதாதி புகர்பவராதிநாளுறிலோ
விந்தையாய்ப்பரவும்மங்கையர்துக்கம் வித்தையோடழிவுசீவிதமாம்
நிந்தையாம்பலவாய்ப்பிணிவருஞ் சுபமேலின்மையுஞ்சமமுனமுரைத்த
தொந்தமாம்பலனுமதியுமால்சுபமாய்தோன்றிடிற்சொல்லுமிப்பலனே

பலனெடுபோகம்பலமனையின்பம் பகைவெலும்லாபமில்லாஞம்
தலமதுபேதம்நீர்க்கரையலேச்சற் றுன்பலவாதமுனன்றும்
உலமொடுபெரியோடெருதுடன்லாப வின்பமுஞ்சுகமெனமனையும்
குலமதிற்கூடும்பவமெனுற்கேடு கூடிடுமிருவர்வகைப்பலனே. 256

வகைகரிபொன்னேன்சேயிவர்சுபாய் வந்திடிற்றனம்புவிமன்னுல்
தகைசெயமாகுஞ்சீவனவெற்றி தனேயொடுமணம்பலசெல்வம்
நகைமுதற்கூடும்வடதிசையாலும் நாட்டுவோம்பகைபவமெணிலோ
துகைபலசேதமுற்றவைகேடு துர்வகைதுக்கசீவனமே. 257

இந்த இராகு புக்தியில் தனது கேது சூரியன் சுக்கிரனிவர்கள் பாபபலனேக் கொடுக்கும்.

6-8-11-12-இவ்விடங்களுக் கதிபதித்துவமேனும் ஷஷ்டஸ்தானங்களி லிருப்பவரேனுமாகிய கிரகத்தின் நக்ஷத்திரங்களிலிருந்தும் அவர் பகையோராகியும் பக்திநாத னிருக்குமிடத்துக்கும் மேற்கண்ட அதிகாரங்களே யடைந்திருக்கி லவர் அந்தரங்கள் வரும்காலம் பகை துக்க சோகம் நாமக்குறைவு அபஜெயம் திடீரென்ற அபாயகரங்கள் களவு சோராக்கினியும் தன்னுல் நன்மை யடைந்தோரே தனக்குக் கேடாக வருவர் இராஜாங்க தண்டனுதி கலகம் தனக்ஷயம் பலவித கலகபலன் பிணிக்கண்டம் மிருகம் வாகனுதிகளால் சேதத்தோடு கேடுமுண்டாகும்.

சுபபலனுகிய ஷஷ்டஸ்தானங்கள் தவிர மற்ற ஸ்தானுதிபதியாகவும் அந்தரநாதர்களுக்கு மித்துருவாகவும் இருக்கும்.

ஷஷ்டகிரக நக்ஷத்திரமுறி லவரந்தரகாலங்களிற் ஜாதகனுக்கு குடும்பாதி சுபம் காரியங் தாமசவெற்றிகளும் மனேவெண்ணும் நீண்டகாலத்தில் முடிவுபெருதல் சுகசவுக்கியம் வியாதி பகை இவைகள் நிவிருத்திகளும் அனேகவகை மேன்மையுண்டாகும்.

சனி-குரு-குஜன் இவர்கள் மேற்கூறியபடி சுபமுமில் பகை நீங்கி ஜெயம் முன் நஷ்டம் பழம்பொருளுங் கைவந்துகூடும் தனலாபம் இராஜாங்க ஜயசீவனுதி பிறபலம் வடக்குமேற்கு திக்கினுல் உண்டாகும்.

பகையாகில் வாராத விரோதம் கஷ்டம் பயம் பிணிவாதை கடனுண்டாகும் இராஜவிட்வாம் நேரும் பலவகை துக்காதி சூதகமாகும் நிற்சயமாக நம்பினவைகள் திடீரென்று கெடும்.

புதன் சந்திரன் சுபபலனுகில் அரசாங்க லாபசமம் வியாபாராதி முயல்வு நேரும் இதரர்களின் சொத்து பாத்தியதையாம்.

பகை நீசராகில் பலதுக்கம் பெற்ருேர்க் கரிஷ்ட சூதகதுக்கம் ஜெலரோகம் திடீரென்ற சிரநோய் பகை விவாதம் கிழக்கு தென்மேற்கு திக்கில் பிரயாணத்தில் நஷ்டம் கவலேயானது நடக்கும்.

புத திசை குரு புக்தி அந்தர பலன்

மாயவன்றனிலேகுருதனதாதிமண்ணினோன் சுபமெனின்மானம்
போயதுகூடுமன்வலியாலே புகழ்சமம்பகைமுதல்வெல்லும்
நேயமாம்பின்பாற்றனமதுகூடும் நீதியாமதிபனாமென்பர்
சேய்மனம்முதலாய்லாபமென்றுரைப்பாதிடத்துடன்பகையதுகேடே

பகைதனிற்றுக்கமன்னினாற்பயமும் பலவகைருணம்பிணிவாதம்
வகையிலாத்துகையும்போம்கரிமாலில் வாணிபந்தன்னினாற்கேடாம்
புகையெனுநோயுஞ்சாருநற்சுபமேல் பொன்வகைகூடிடுமணமும்
நகையுடன்கூடுஞ்சமமதாம்லாப னாட்டிடும்புகர்மதிநாளே. 259

நாளினிற்சுபமேலுற்றவர்நலமாம் நால்வகைப்பொருளும்வந்தெய்தும்
பால்தனால்லாபம்மணமகப்பேறும் பாம்பிவாசுபமுன்னவரேல்
தாள்பவராலேபகையொடுகலகந் தனைமனைத்துக்கமுந்தன்னை
யாள்பவராலேமைரமாந்தேயம் மலைகுவன்றுக்கமுமாமே. 260

துக்கமாகுந் தூவியைப்போலுமாம்
மிக்கதானவியல் பிடம்பிட்டயல்
ஒக்கவேயுழன் றுள்ளுடைந்தொல்குவன்
பக்கநற்சுபம் பற்றுமுன்னன்மையே. 261

இந்த குரு புக்தியுள் தனது சூரியன் குஜனிவர் பாபாதிபரின் நாள் வாசரா யிருக்கில் இடம்விட் டுழல்வன் பழய பாத்திபமான முயற்சி முதலியதால் வருந்தி துக்கிப்பன் உஷ்ணவாதாதி இருதய நோய் அல்லது சிரநேத்திர நோயால் வருந்துவன் பல கவலை யடைவன் கடனாவன்.

சுபமாகில் சமசவுக்கியம் மேற்கண்ட கொடிய பலன்கள் காணினும் நீங்கி சுகம்பெருவன் நினைத்தவை காலாந்தரத்திலேனுங் கூடும் பலவகை யின்பத்தையும் யடைவன் பெற்றோர் உடனாளிகட்கு அற்ப தீங்குண்டாம்.

சனி புதன் சுபமாகில் வியாபார ஸமான முயர்ச்சியாலும் எழுத்து முயல்வாகிய வின்மைகளாலும் சமலாபம் பெறுவன் கல்வியாற் கியாதியும் பரஸ்தல மன்னராற் செயம்பெருவன் இதரர்களாலுதவியும் தென்கிழக்கு வடக்கு இந்த திக்குகளாற் செயம் பெறுவன்.

சுபமாகில் சென்ற விடங்களில் பல துக்கமடைவன் நல்ல லாபமுடைய காலங்களிற் செய்தொழிலால் பின் நஷ்டம் பெருவன் ஒருவரை நம்பி நஷ்டப்படுவன் பல கவலை துக்கமுண்டாகும்.

சுக்கிரன் சந்திரன் இவர் சுபமுறில் எடுத்த கன்மவெற்றியும் வெண்மை சிகப்பு இருட்டுப்போன்ற நிற வஸ்துக்களாலும் மனித

ராலும் பிறபல ஜெயம் பெருவன் வழக்கு ஜெயமடைவன் பல ஸ்திரீ போகமும் பெண்ணுடையதல்லது இதரர்களின் சொத்துப் பெருவன் சுபகல்யாணாதி சிலவுண்டாகும்.

அசுபம் பெறில், பகை நீங்கும் தனலாபம் பெருவன் ஞானியாவன் பலயிடம் போவன் கபஜலாதி நோயுண்டாகும் சிரசு நேத்திரங்களில் நீருமத்திரவம் பெருவன் பெற்ரோர் மனைவியர் துக்கமடைவன் சிறியோராற் பகைவரும்.

இராகு கேது சுபமுறில் பகை கலகத்தாலும் ஒருவர் இறப்பதாலு மிவனுக்கு சம்பந்த மில்லாத பொருட் கூடும் பகையை வெல்வன் நஷ்ட சோரவகைப்பொருள் ஞானமுடைய வதைகளை விட்டு விடுவன்:

பாபமுறில் கீழ்ழனுவன் குறைவுந் துக்கமும் பேதமான வேதியாவன் தூரதேசவாசியாவன் விடபய நோயுண்டாகும் இரும்பு முதலிய அக்கினி வேலையால் தேக விரணமுண்டாகும் பலவாதை பெருவன் குடும்ப துக்கமடைவன்.

சனி புக்தி அந்தர பலன்

பண்புறுபுதனிற்கரிதன தாவம் பானுரும்பகைப்வமெய்தில்
தண்புவிபகையும்மன்பயத்தெண்டம் தனைமனையருட்டமுங்காட்டும்
வம்புகள்வருமாந்தானப்ருட்டத்வம் வண்பிணிசுபமெனில்நீங்கும்
கண்சுகம்லாபம்சமமதாம்வெற்றி காரிகைக்கரிட்டங்கண்டகலும். 262

அகலுமேபொன்மால்சுபமெனிலரிய லன்னவர்பெரியவரின்பம்
பகையதுசெயமாங்கல்வியாற்செயமும் பழந்தனவாடையாபரணம்
தகைவிலாசேருப்பவமெனிற்றடங்க டானுருவாதமும்வழக்கும்
சகத்ததிகேடுபிணிமரணங்கள் தான்வருஞ்சந்திரன்புகரேல். 263

சந்திரன்புகரோன்சுபபலத்தெய்தில் தரணியோர்சன்மகமானம்
விந்தையாய்க்கூடும்வாகனவணிக மின்மணப்பேருடன்றனமும்
முந்தவேசேருங்கட்டிடமுதலாம் முன்னவர்பகைபவத்தாலே
கந்தயாப்காமங்கெடும்பலமோசம் காட்டிடுங்கயல்விழிகேடே. 264

விழியினோன்செய்காட்சிரம்விழிநோயும்வியமிகமணப்பயமுற்றோர் [ம்
பழியெனக்கெடுவார்பகைவரும்பெற்றோர் பல்வழிப்பிணியுடனுண்டா
அழிந்திடும்பொருளும்பிராதுருக்கரிட்ட மாகிடுஞ்சுபபலமெனிலோ
பழியதுதீரும்பகைமனத்திடரும் பற்றியேயுடன்பவம்போமே. 265

இந்த சனி புக்தி நாளுள் தனது இராகு கேது அசுபராகில் இவரந்தரங்களிற் பகை வீண் கலகம் நஷ்டம் பலரால் துன்பம் சோராக்

கினி பயம் ஸ்தானபிருஷ்டம் துக்கம் நம்பினவராற்கேடு போசடிக குள் படுதலால் ராஜபயம் விவாத பலனுகும் பித்தவாத நோய் விஷ பயம் காட்டும்.

சுயமாகில் நினைத்தவை சிலபாகம் அனுகூலம் சில பாகமும் கெடும்பகை நீங்கும் மன்னுற் கிலேசமாகும் முயர்ச்சிகெட்டுப் பின் கைகூடும் பலவகைகளால் குடும்ப கிலேசமாகும்.

குரு புதன் சுபமாகில் முயற்சி வெற்றியும் ஞான அறிவு மிக ஒழுக்காசாராதி மந்திர தந்திர சித்திகள் சாஸ்திராதி விவகாரங்க ளால் லாபம் நன்மார்க்கம் வித்தை பிறபலகீர்த்தி லாப மேன்மை யுண்டாகும்.

பாவமாகில் நாமக்குறைவு பலகவலை துக்கம் ஞான அறிவுக் குறைவு பழய பொருளுங் கையிலுற்றவையும் திடீரென்று மோசமா கக் கெடும் இஷ்டபந்து துக்கமடைவன்.

சுக்கிர சந்திரன் சுபபலமுறில் பலநாட் கோரியவைகள் சில வற்று பூர்த்தியின்றி முடியும் பெண்வகை விருத்தியும் அன்பர் பகை யல்லது பெண்களாற் றனலாபம் இராஜவசியம் நேரும் பலவாகனுதி வாணிபங்கள் கருமைவெண்மை வஸ்து வடகிழக்கு தெற்குதிக்கினுற் கூடும் செயம் மணம் மகம்பேரு கூடும்.

பவமாகில் பகையும் பெண் சிசு இவைகளின் துக்கமும் பல வகைக் கிலேசமும் அதிகமான விரயமும சிறியாலது பெண்களால் நாமக்குறைவும் பலவகை வருத்தமும் நேரும் தூர ஸ்தல யாத்திரை யும் சமுத்திர நதிமேல் யாத்திரையு முண்டாகும்.

ரவி குஜன் சுபமாகில் அற்பலாபம் பழயபொருளால் வாதம் வெண் சிகப்பு வஸ்துவால் இராஜாங்க கலகம் சீவனபேதம் ஸ்தான பேதமாம் ரக்தம் நாம்புகளில் நோயுண்டாகும்.

பாபமாகில் மிகக்கேடு சிறியோரால் மானக்குறைவு பல கவலை பணப்பயம் தனநஷ்டமாகும் உஷ்ண விரண நோயுண்டாகும்.

மேற்கண்ட ஒவ்வொரு கிரகாந்தங்களுக்குங் கூறிய ஒவ்வொன் றும் சுபபாபங் கலந்திருக்கில் அதிற்கண்ட நன்மை தீமை பலன்கள் இரண்டையுங் கலந்துபார்த் தறிதலே அறிவுடையாரழகெனக் காண் கவும்.

கேதுதிசை தனது புக்தி யந்தரபலன்

காணுமேசிகியிற்றன்னுள் கதிர்தன திந்துசேயில்
தோணியவெண்ணக்கேடு தூதுளார்துன்பமுண்டாங்
கோணிடுகன்மமெல்லாங் குலேநோயுஞ்சீதபேதி
பூணுறுந்தனநட்டங்கண் புண்யனேற்புகழ்பின்னுமே. 266

ஆம்வகைச்சுபத்தால்னட்ட மடைவுதுவரிவைகண்டம்
போம்பொருட்பொருதாற்கூடும் புணவினைப்பிணியும்போமாந்
தாம்பிரம்முதலாயுள்ள தனமதுசேருமற்பம்
காம்பிணில்விரணகண்டங் கண்டுடனீங்குங்காணே. 267

காணியாம்புந்திபொன்புகர்நாளிற் கதித்திடுமன்னராலின்பம்
வேணியின்புத்திபூசுனைமுதலாய் விளங்கிடுபல்லவரின்பம்
பேணியேவுண்டாங்காரிபாம்பதிலே பெற்றவர்குழவியர்க்கரிட்டம்
பூணிடுநட்டம்பகைமனத்திடரும் புரவலராலும்வந்துருமே. 268

வந்திடும்சுபமேற்சமபலன்காட்டும் மன்னவர்கல்வியாலின்பம்
தந்திடுமுடனேவனுபவமில்லாச் சதிருதிலேசமுமுண்டாம்
முந்தியபொருளும்போம்ருணபீடை முன்னதால்வருந்துவாதத்தால்
சொந்தமில்லாபம்மடுத்துடன் வாழ்வுந்தோய்ந்திடுந்துரிதமிப்பலனே.

இந்தகேது தனது புக்தியில் தனது ரவி குஜன் சந்திரன் இவர் அசுபராகி யிருக்கில் இவரந்தரநாள் பகை சிரநேத்திராதி விரணம் குலேநோயும் பலவிரயம் பெயர்க்குறைவும் குடும்பத்துக்க கஷ்டபல னுகும் கோள்பெருகும் மோசடியிலே மாருவன்.

சுபரால் சம்லாபம் முயர்ச்சிதாமிதம் விரயம் பழயபொருளால் வருந்துவன் பிணிநீங்கும் ஒருவராண்டுதலாற் பரதேய யிடங்களில் நன்மை பெறுவன்.

குரு சுக்கிரன் புதன் சுபராகில் இவரந்தரம் வெகுதாமிகத்தின் மேலனுகூலிப்பன் சமலாபமாம் அற்பசுகம் இதாருக்குள் மேன்மை யால் லாபமின்றி திரிவன் பெண் அல்லது சிறியமன்னு லற்பசுகி.

பாபமாகில் ஓர் பெரிய இடம் ஸ்தானம் பெண்ணூற்றுன்பம் பல கவலை விரயம் கடனும் மகவு முதலிய குடும்பத்தாருக்கு அரிஷ்ட முண்டாகும்.

சனி இராகு இவர் சுபராகில் பலகவலையும் விஷபித்ததீர் ரோக பயம் கருமசூதகம் அலைச்சல் மோசடியாற் றனநஷ்டம் சிறியோர்க ளாலவுமானமாம்.

சுபமாகில் அல்லல்நீங்கும் பிணிசுகம் அதிக விரயம் அக்கிருமத் தால் நேரும் ஒருவருக்காக ஜாமீன் கொடுப்பதால்லலது உதவியால் வருந்தியனு கூலிப்பன் அற்பசுகம் பெருவன்.

சுக்கிரன் புக்தி யந்தரபலன்

தோன்றுங்கேதுவிற் சுக்கிரன்றன்மதி
யூன்றும்பாம்பு முயர்பெருகற்சுயம்

சான்றுளோர்க்குத்தனஞ் சமலாபமும்
என்றவேவருமின்பமு மற்பமே. 270

அற்பமானவரி வயர்கண்டமும்
சொர்பமாகுந்துலே வழிசெல்லலும்
பொற்புடன்பிறந்தார்க்கும் பகைபிணி
மற்பொருந்தும் மகபமென்மேலவே. 271

வம்புசேருமகப்பெயர் துக்கமுந்
துன்பமோடுதுலேவழி நட்டமுங்
அன்புளோர்பகையாகிடும் புந்திபொன்
றம்பதிச்சுகம் சாரும்மணப்பேறே. 272

பேருங்கூடும் பிரபலவின்பமும்
சீருஞ்செல்வந் திடமன்னர்சீவிதம்
நீடும்பாவனிறைந்திடிற்மேடதாம்
போருங்கூடும் புகைபிணிகண்டமே. 273

கண்டங்காரிகதிர் குசனகாடெலா
மண்டிவாசமமர்ந் திடுயோகமும்
பண்டிதத்தொழிலாற் பலனின்றியே
உண்டலாபமுறங்கிக் கிடப்பனே. 274

இந்த சுக்கிரன் தனது சந்திரன் பாம்புகள் சுபராகி யிருக்கில் பகை நீங்கும் முயர்ச்சிகால தாமிதத்தின்மேலடைவன் மலசலநோய் கண்டு நீங்கும் ஓர் பெருமையான தன மல்லது சீவனுதி யோகங்கைக் குவருவதுபோலிருந்து தப்பும் அற்ப சுகமும் உண்டாம் அலேச்சல் ஸ்தானப்ருஷ்டமாவன்.

பாபமாகில் பலவை விருநீருபத்திரவம் நரம்பு வியாதியுண்டாம் கலகமும் நஷ்டமும் குறைவும் பெண் பெந்துவகை துக்க சூதகம் மோசத்தால் வறுந்துவன் இராஜவிட்வரம்.

குரு புதன் இவர் சுபராகிலிவரந்தரநாளில் பழய பொருள் சீவன வின்பம் பகைபயம் நீங்கும் சுபமங்களவிரயம் நல்ல சாஸ்திர பரிச யாதி தெய்வபக்தி விசேஷமான நூற்பிரபலகீர்த்தி வித்தையால் ஜெயமடைவன் இராஜஸன் மானமாம்.

பகை பாவமாகில் உற்றவையும் அனுகூலமுமாக இருந்தவை கெடும் பல கவலே குடும்ப துக்கம் அதிக கடன் பல வருத்தமும் தனதானிய நஷ்டம் புத்திர சோகாதியாம்.

சூரியன்-குஜன்-சனி இவர் சுபராகில் இவரந்திரநாளில் கலகப் பொருளும் பூர்வநஷ்டமுங் கூடும் ஞாதிதுக்கம் சகோதிராதிவகை ஸ்திரீ துக்கம் பல விவாதாதிக்குறைவுகள் நீங்கும் வியாதி சமனுதும் கைவிட்ட முயர்ச்சி சீவனம் மறுபடி கிடைத்தல் ஆகினும் அதனுல் சந்தோஷ மத்திமமாம்.

பாவமாகில் அனுகூலம்போல் ஒற்றவைகளை நம்பி நஷ்டமடைந்து பின் துக்கம் பல கவலை பகை பல விபாதி துன்பம் குடும்ப துக்கம் ஞாதிசகோதரவகை யரிஷ்டம் சமலாபம் மோசத்துவம் விரோதிகளாலுண்டாகி இராஜ தெண்டனைகள் ஏற்படும்படியான பயம் பல வகை விரயம் கடனுகும்.

சுபபாபமிச்சிரமாகில் மிச்சிரபலன் நடக்குமென்பதாம்.

கேதுதிசை சூரியன்புக்தி

பாவியசிகியிற் கதிர்தனதாவம் பானுவின்மகன்வருஞ்சுபமேல்
தாவியர்போல்வான்றனவகையற்பம் சுகஞ்சமபலனதுவாகும்
விரயமுமதிகம் பொன்றனவாத மேவிடும்பவபலத்துறிலோ
புரவியாற்கேடும் பலருணங்கண்டம்புகழழிந்திடும்பகைபயமே. 275

பயமுறும்பொன்னேன்சேய்புதன்சுபமேல்பலதனம்புவியுளோர்செல்
நயமுறுமணத்தோடாடையாபரணம் நல்கிடுந்திரமிலரிதுண்டாம்[வம்
செயமுறுவாதம்பயமெனிற்கேடு சிசைக்ஷயும்விலக்கினுற்கண்டம்
வயங்கிலாதயலோர்திசையினிற்போகில் வந்திடுநஷ்டமு:பிணியே.

பிணியொடுவாதை புகர்மதிசுபமேல்பின்னவர்பணதியும்போகம் [றும்
அணிபெருஞ்செட்டோர்வகைதனுற் குறைவுமவமுருசானமுந்தோன்
கணிதமாமுயல்வாற்பலரையுமறிவன் கனகமுமுடனவராலும்
வணிகமுமுண்டாம்சுபமேற்கேடு மாகிடும்பிணியரிவையர்க்கே.

இந்த சூரியன் புக்தியிற் தனது பாம்புகள் சனி இவர் சுபராகில் பகை நீங்கும் அற்பதனம் வரும் பகை விவாதங்கூடும் செயமாகும் பிணி நீங்கும் முயற்சி தாமிதமாகும் அலைச்சலுண்டாம் நல்விரயமாம் லாபமுயர்ச்சியாகினும் பலன் கொடாதாகும்.

பகை பாவமாகில் பலமுயல்வு கொடும் சோரம்போல் கஷ்டம் வழியிற் கலகம் பகையாய் பிணியாவன் விவாத வழக்குநேரும்.

குருபுதன்சேய் இவர் சுபராகில் முயற்சி மன்னரா லாபஜெயம் நூதனபிரபு மேன்மை அவங்காராதி வஸ்துவுண்டாம் தீராவலைச்சல்.

பாபமாகில் சகோதராதி சந்ததிவகை யரிஷ்டம் துக்கம் வாசாத அபாய கலகம் சோராக்னிபயம் தனநஷ்டமுங் கடனுமாம் சிசுதுக்கமாம்.

சுக்கிரன் சந்திரன் சுபராகில் வாகனாதி ஸ்திரமில்லாமலுண்டாம் பிறரால் அனுகூலம் பரமேபாகவின்பம் வியாபாரமல்லது அடுத்தயிடம் மேலானோரால் ஓர் கெட்டயெண்ணம் திருட்டுத்தனமாக இருகணத் தால் உட்கலகம் சுபம் பலசுகமாம்.

பகைபாவமாகில் மிகத் துன்பங் கலகம் பெண் அல்லது மேலதி காரியால் கெட்ட எண்ணமுண்டாகுதல் நீர்நோயும் கபநோயும் வெண் சிகப்பான வியாபாரம் மனிதர்களால் பகை நஷ்டமாகும் பெண்கள் அல்லது மிகவும் அன்பும் போகமுமுள்ளவைகளுக்கு நஷ்டம் உண் டாகும்.

சந்திர புக்தி யந்தரபலன்

அன்னைக்கேள்சிகியிற்சந்திரன் றனதும் அருக்கனும்புகர்சிகிநாளில்
மன்னவர்பயமாம்வாணிபக்குறைவும் மகிழிலாப்பிணிகபமுதலாய்
சொன்னயமொழியார்பகைதனக்கேடு தடருமேசுபஞ்சமமதுவாம்
மின்னிடைப்பிணியும்பலவகையரிட்ட மேவுமேகலகம்பொன்புவியால்

புவியுளோன்பொன்மால்சுபபலத்துறிலோ பொன்னுடனுடையாபர
கவியுறுவித்தைசீவனமேன்மை கனகமுமன்னராற்கூடுஞ் [ணங்
சுவைபரிமளமும்புராதனவாதம் துலைந்துடன்சுகமனத்திடமு
நவிலுவர்பவமேற்சொன்னவைகேடாய் நாட்டுவவரம்பினோலே.

அன்புடனோரற்பலவகைகட்டம் அடுத்திடுங்கரியரவதனுள்
துன்பமுங்கேடுஞ்சித்தமுங்கெடுமாந் துயர்வருங்குடும்பமில்லாட்கும்
வம்பெனவாதம்சுபபலமெனிலோ மனப்பயம்நீங்கிடுமணமும்
தன்பதிவிட்டேநடக்குதலின்பஞ் சார்ந்தவர்தன்னினுற்றுனே.

இந்த புக்திநாளில் (தனது சூரியன் சுக்கிரன் கேது இவர் சுப பலமுறில் அதிவுஷ்ணவாதை நீங்கும் பகைவிலகும் முயர்ச்சி காலாந் திரத்தில் மெதுவாக நடக்கும் சகோதராதி குடும்பவகைக் கிலேச மூந்தீரும்.

பாபமாகில் முயர்ச்சிகெடும் கடும்பகை உடனுளிகட்குள்ளா கவே நேரிட்டுப் பல கஷ்டமும் பாத்தியதையை யிழந்து தவிப்பன். இராஜபயம் பலவகை இருதயதாபநோயுண்டாம் விஷரீ ரூபத்திரவங் காணும் களத்திரம் சிசுகட்கரிட்டமாம் பெண்ரோகமாம்.

குரு புதன் குஜன் சுபபலமுறில் போன பழையபொருள் நிஷ் காரணமாகக் கைகூடும் பகைநீங்கும் தனதானிய நஷ்டமாகும் அனேகவிதமான விரோத விவாதமும் வந்து ஜெயமாகும் கல்வி ஞான அறிவால் கீர்த்திகளும் பலருடைய மேன்மைக்குங் கர்த்த

பதவியாவன் கிடைக்காதபதவி திடீரென்றுகைகூடும் வஸ்திராபரண பூஷணாலங்காரமாகும்.

பாபமாகில் சிசுமுதலிய குடும்பத்தில் மிக உதவியுடையாரின் துக்கமும் பல கவலையுமுண்டாகும் மனப்பயமாகும் அறிவு குன்றும் சமதியோரால் நாமக்குறைவு நேரும் அசத்தியங்களால் ஸம்பாதித்தது ஓர் லிகிதமுதலிய இராஜாங்க விட்வரத்தாற்கெடும் பல கவலையாகும் நரம்பு எலும்பு ஸம்மந்த நோயுண்டாகும்.

சனி ராகு சுபமாகில் களவு நஷ்டம்போன்றவை கைகூடும் பகை நீங்கும் ஈனஸ்திதியோரா லல்லது தாழ்குலத்தாரால் நன்மை பெருவன் வீண் வழக்கு வெல்லும் பலவகையன்னியர் பொருள் காரணமாக வந்துகூடும்.

அசுபமாகில் மிகு சங்கடம் கலகம் மறைந்துபோன கேடுந்திரும்பவுண்டாகி நஷ்டமடைவன் பலவகை துக்கபலன் இஷ்டபந்து மூலியதுக்கம் தேகத்திற்கு அபாய நோயுண்டாகும் வாகனமல்லது அயலிடங்களில் சஞ்சாரகாலத்தில் ஓர் கேடு உண்டாவதினால் தேக பீடை உண்டாகும். மனக்குறைவாகும் சோர சத்துருக்களால் பல விவாத பெரும்பயம் தன்னையறியாக் கவலை சோம்பல் பலவகை மத்திமபலனாகும்.

குஜன் புக்தி யந்தாபலன்

கூறுஞ்செம்பாம்பிற்குஜன்றன தருக்கன் குலைபிணிசுசிதனாற்பயமும்
பாரியர்தனக்குமிகத்தினோன்றனக்கும் பகருவர்விழிவிரணங்கள்
நேருமாம்வாதம்பணிகரிநாளில் நிருபரால்வாதமும்பகையும்
சேருமாஞ்சுபமேற்சமபலன்கடனோ டேகுவன்பலவிடம்விதமே.

விதமுறும்புந்திமதியிவர்நாளில் வித்தையுமற்பமாம்பலனும்
நிதம்பகைநோயுமீனசாதிகளால் நிழலெனும்பயமனத்திடராம்
உதவியாறுவர்பொன்புகர்சிலநா ளூற்றவர்க்கரிட்டமுமுண்டாம்
பதவியல்கெடுமாமனைமகப்பிணியும் பலவகையாகும்பலபொருளே.

வகையெனும்பெண்ணோர்கிளைதனாற்கலகம் மன்பலவாதமும்பயமும்
துகையதுவழியுந்தலையிடமலைச்சல் சோரமாம்பலதுயர்தோன்றும்
நகையொடுபுவியால்வாதமுஞ்சேரும் நயமிகுவஞ்சியரின்பப்
புகையெனுநோயாற்பீடையாம்பின்பால் புகழுறுஞ்சுகஞ்சமபலனே.

இந்த குஜன் புக்தியில் தனது சூரியன் இவரந்தரநாளில் அற்ப குலை நரம்பு முதலிய ரக்தநோயும் பகை கடன் விவாத விரோதமான பலனாகும் ஜாதகன் களத்திரமிவைகட்குள் பகைமேற்கூறிய நோய் விழிவிரண பீடையும் தவருதலாலே பயம் பீடையுமாம்.

பாம்புகள் சனி இவர் சுபாாகில் இவாந்தா நாளில் பகையின்றி செயமும் கீழோர்களா லின்பமும் விவாதங்கள் மேலாகுதல் தனலாப மாம்.

பாவமாகில் பலநீர் வாதபீடை எதுவுவறிவினுக்குத்தோன்ருது கஷ்டமும் பலவித விரயம் சோரசத்துருவாகும் ஸ்தான ப்ருஷ்ட மாம்.

புதன் சந்திரன் அந்தாநாளில் வித்தை மேன்மை ஸ்தானபேதம் வெண் சிகப்புநிற வியாபார முயலாற் செயலாபமாம்.

குரு சுக்கிரன் சுபகல்யாணாதிகளை யனுபவித்தல் விருந்து போஜன முண்டாம் பலவித உல்லாசமாகினுங் திரமில்லாத இன்பம் சங்கீத சல்லாபாதி சுகம் இவை நடக்கும்.

பாபமாகில் மேற்கூறிய பலன்களாற் கேடு தனவிரய மலேச்சல் மனதுக்கு கஷ்டம் பலவகையரிஷ்டம் பிரரை நம்பிக் கேடுண்டாகும்.

இராகு புக்தி அந்தர பலன்கள்

பெருமையாஞ்சிகியிற்பணிதன தழலும் பிரமைகனிவர்பலன்கேளாய்
உரிமையார்துக்கம்பலனதுகேடு உற்றவர்க்கரிஷ்டமுண்டாகும்
தருமமும்கெடுமாம்பொன்றனநாசஞ் சச்சரவுடன்பலவாதம்
பெஞ்சுபமென்னிற்பகைமுதற்றேன்றிப் பின்சுகஞ்சமபலன்பேசே.

பேசுமேபுகரோன்மதிசுபமாகிற் பெற்றவர்தன்வகைதீண்டு
னேசமாமன்னரின்பமுமேலாம் நிறைந்திடும்வாணிபாதியினல்
வாசமாம்பிறத்தோர்தேயமேவின்பம் வழக்கதுமணஞ்சுபவிரயம்
ஆசிகள்பெருவன்சுபமேற்கண்டமாகிடும் அரிவையர்தனக்கே.

தனதுறும்பொன்னேன்கதிரினில்யோகம் தரையதிபதிதனுலின்பம்
மனமகிழுண்டாமாடையாபரண மானிதிபெருகுமன்கீர்த்தி
அனநடையடைவன்காரிபாம்பதனில் அருமகவலதுமுன்னவர்க்கு
மனஞ்சலிப்புடனேவாதையென்றுரைப்பர்வழியினிற்பயந்தனகேடே

இந்த இராகு புக்தியுள் தனது செவ்வாய் புதனிவ ரந்தாகாலம் உற்றவர்களின் துக்கசோகாதிகள் மேலானவர்களாற் சிலகண்டிதாதி விவாதமுறுதல் இராசாங்க மூலிய வாத பயம் விரண உஷ்ண நோய் உண்டாகுதல் சகோதராதி பெற்றோர் இவர்களுக்கு தேககண்டம் நஷ்டம்.

சுபபலமாகில் அற்பக்கேடு விரயம் கலகம் சமமாகுதல் முயர்ச்சி தாமிதானுகூலமாகும் மேற்கண்ட பலன்க ளற்பங் காண்பித்து நீங்கும் சுக்கிரன் சந்திரன் சுபபலனுகில் பிரபல வெற்றி நூதன ஸ்திரீ சுகம் சுபசோபனதி மகிழ் கீர்த்தியாகும்.

பாபம் உறில் பகை வரும் பெண் அல்லது சிறியவரால் கலகமும் பொருட்சேதம் தனதானிய நஷ்டம் கடன் முதலிய கியாதிக் குறை வுண்டாகும் ஸ்திரீகட்கு அரிஷ்டம் கலக பலன் வியாபார நஷ்டம்.

குரு சூரியன் சுபமுறில் இராஜ ஜீவனுதிகார வெற்றி வடகிழக்கு திக்கால் செயம் சுபாதி மேன்மையுள்ள கீர்த்தி கீழ்சாதி பிரபுவால் நோய் தோன்றும் நஷ்ட பலன்.

சனி இராகு அந்தர காலம் இவர் பாபராகில் புத்திர குடும்பாதி பிதுர்வஸக துக்கசோகாதிகள் பகை விரோதவாதம் செலவு சிறியவர்க ளால் அவமானக்குறை வுண்டாகுதல் பந்து துக்கம் கைக்குதவியான பொருள் சீவனுதிகள் குன்றும்.

சுபமாகில் அன்யர் முதலியால் அனுகூலம் கெட்டு நஷ்டமு மானவை கைகூடுதல் திருப்தியில்லாத சுபசந்தோஷிதாதி லாபங்கள் கஷ்ட ஜாத்யமும் விரயாதிகத்தின்மீது செயம் பெருதல் நடக்கும்.

குரு புக்தி அந்தர பலன்

சென்னுகந்தனிலேகொன்றோன் றினந்தனதந்தாத்தோ
டன்னேயான்மாலின்னுளி லடுத்தவர்க்கரிட்டமாகும்
மன்னராற்பயமாம்வெற்றி மறைந்திடும்பிணிகோள்துக்கம்
சொன்னநாட்பின்னுளின்பந் துடருமேசுபத்தாற்றுமே. 286

துடருமேபுகரோனுதி கன்னிவர்பவமுற்றுக்கால்
அடருமேதனங்களெல்லா மரிவையாயலோராலும்
இடம்பொருளேமேலின்பம் இணகாதவகையுங்கூடும்
திடமிலாப்பவமேலின்பஞ் சிறுத்துறுமுதவிபோமே. 287

துடருமேபுகரோனுதி கன்னியவர்பலமுற்றுக்கால்
அடருமேதனங்களெல்லா மரிவையாயலோராலும்
இடம்பொருளேவலின்பம் இணகாதவகையுங்கூடும்
திடமிலாப்பவமேவின்பஞ் சிறுத்துருமுதவிபோமே. 288

போம்பணிகரிபின்னுளும் பூமியோன்சுபமேலின்பம்
ஆம்முயலகன்றுகூடு மரிவையர்க்கரிட்டங்காட்டும்
தாமதிகாரிவெற்றி சரியிளோர்க்கின்பமேவும்
வாமமானதிசையாற்கேடுவரும் பின்பாலசுபத்தோர்க்கே. 289

இந்த குரு புக்தி காலத்தில் தனது சந்திரன்-புதன் இவர் பாப பலத்தைப்பெற்று இருக்கி லிவரந்தர நாளிற் பதைகேடு உதவியுற்ற பொருள் மனிதரை யிழந்து தவித்தல் கடன் பல கஷ்டம் குடும்ப துக்கம் பலனுகும்.

பாபபலத்தை யடையில் கலகம் முதலிய கெடுதற்களற்ப முண்டாகி நீங்கும் முயற்சிகாலதாமிதம் பலகஷ்டம் அலேச்சல் மன்னரைச் சேரினும் காலாகாலத்து பலனடையான் சுபாதிவிரயமாகும்.

சுக்கிரன் சனி சூரியன் பாபபதமுறில் கலகமதிகம் பெண் முதலிய அன்யர்வகையால் காரணமின்றி விரயமாகும் அலேச்சல் களத்திரஞ்சிர முதலிய துக்கசோகாதி மத்திமபலனுகும்.

சுபமாகில் இழந்துதவிக்கும் முயல்வு வலுவில்வரும் ஆகாததுங்கைகூடுஞ் செயமாகும் இதாரலது பெண் சொத்துக்களை யகாரணமாக வனுபவிப்பன் தென்மேற்கு திக்குகளினுல் கிடைக்கும் லாபமதிகமாகும் மிகவு மேன்மையுள்ள ஓர் அயல்தேய மன்னராலின்பம் பெருவன் திரமான ஜீவனமடைவன்.

சனியந்தரம் சிலபாகம் இராகு கேது குசன் சுபமாகில் இவரந்தரநாளில் துஷ்டர்கள் கீழோர் சகவாசவனுகூலம் போற்ருென்றுதல் உள்ளூரப்பெருங் கெடுதலும் அவுமானத்துக்கும் இடமுண்டாகுதல் தனவிரயம் பலவகையற்ப பலனுகும்.

பாபமுறில் பிரபலபிளவை முதலிய ரபக்தஸம்மந்தநோய் பயம் பெற்ருேர் முதலிய பூர்வாள் துக்கம் இராசவிட்வாம் கலகம் தனவிரயம் பகை சோராக்கினி துன்பபயநஷ்டம் கூட்டங்களிற் செல்வதால் பெரும்பயம் விஷயமான பாதையேனும் நேரிடும் ஒருவருக்கொருவர் மாச்சரியத்தால் பிறட்டு கையெழுத்து முதலான விகிதமூலிய விஷங்களால் தனக்கு மடுத்தோருக்கும் இராஜாங்க கலகம் விளேவித்தலிவ் விதமான கஷ்டபலன்க ளுண்டாகுமென் றறியவேண்டியது.

சனிபுக்தி யந்தர பலன்கள்

அந்தமாஞ்சிகியில்மந்தன வன்றன தாவுவெய்யோன்
சிந்தையாம்பாவமெய்திற்றிட முறுங்கன்மக்கேடாம்
பந்துவாற்கலகனட்டம் பலதனவிரயவாதம்
முந்துளார்க்கரிட்டமென்றே மொழிகுவர்நூல்வல்லோரே. 290

வல்லவன்சுபமேலாபம் மன்னராற்செல்வங்கூடும்
நல்லவனுவன்வெற்றி நால்வகையதிகாரங்கள்
பல்லவர்வணக்கநாளாம் பலஞ்சமம்பழியேதீரும்
அல்லலாம்பாவநாளிலதி பயம்விரயங்கேடே. 291

கேடுறுஞ்சேய்மாவிந்து பிளேஞருக்கரிட்டங்காட்டும்
பீடுறுமடந்தைதன்னுற் பிரபலக்கேடுமுண்டாம்
நீடியகன்மம்போகும் நிலேப்பிலான்சீவிதங்கள்
ஓடுவன்றேசமெங்கு முய்ப்பவைசெட்டிற்சற்றே. 292

சற்றெனும்பொன்னேன்வெள்ளி சரீசுபமெய்திலின்பம்
பற்றிடுமன்னுல்யோகம் பழந்தனவின்பங்கூடும்
நற்றமிழ்வாணிபங்களுல் வகைவாதவெற்றி
அற்றதுகூடும்வேள்வி யருமகமணமுமென்னே. 293

இந்த சனிபுக்தியில் தனது இராகு கேது சூரியன் பாபமாகில் புழையதன வகைசோரும் துக்கபலன் உதவியுள்ள வின்பத்தாரழி வர்பேரிடங்களிற் பகையாம் தனநஷ்டம் கலகமாகும் முயர்ச்சிகெடும் இராஜவிட்வாமும் சோரசத்துரு பயமேனு முண்டாகும் வாதநீரு பத்திரவ நோயாகும்.

சுபமாகில் மேற்கூறிய ஒவ்வொரு பலனும் அற்பங்காட்டி நீங் கும் பகைசெயமாகும் காலாதீதத்தின்மீது இன்ப முண்டாகும்.

குஜன் சந்திரன் புதன் சுபமுறில் இவாந்தரநாளில் வியாபாரா திகளாலின்பம் வடக்குதிக்காலும் அக்கினிதிக்கினுலுஞ் செயம்பெரு வன் தனவானுவன் திரவியலாப முண்டாகும் குடும்ப சுகமாகும்.

பாபமாகில் மிருபகை துக்க சூதகம் ஜீவனக்குறைவு வியாபார முயல்வு முதலானவைகளால் தனநஷ்டமாகும் பின் அற்பங்கிடைக்கு மல்லது கலகவிவாத மாகும்.

குரு சுக்கிரன் சுபமாகில் கீழோருக்குள்ளான முயல்வினு லற்ப லாபம் வரும் பகை நீங்கும் சத்துருவின்ப ஜெயமாகும் சுபமணம் இவைகளால் விரயம் நல்வகை தருமயாத்திராதிகளால் பெயர்வரும் மோகனஸ்திரீ மேன்மையான சுகமுண்டாகும் தனக்கு சொந்தமும் சொந்தமில்லாத தாகவும் தோன்றும் பொருளிடங்களுக் கதிகாரி யாவன்.

பாபமாகில் கைப்பொருள் சீவனங்கெடும் வெண்மை கறுமை கலந்த சிகப்புள்ள வியாபாரத்தால் கேடுண்டாகும் தனநஷ்டமாகும் ருணத்தால் வருந்துவன் பந்து நல்ல வயதுடைய மனையாள் மக் களுக்கு தேககண்டமானவை நேரிடும் ரத்தசோஷித நோய்பய மாகும்.

புதன் புக்தி யந்தரபலன்

உற்றதோர்சிகியிற்புந்தி யுளதவன்றனதுஇந்து
பற்றுடையார்க்குக்கஷ்டம் பலனீயாரிட்டமாகும்
பெற்றவரிழப்பன்பேதம் பிரபலப்பவத்தினுலே
கற்றவைதன்னுலின்பங் காணிலான்சுபமேற்காணே. 294

காணிவனற்பலாபம் கதிர்குஜன் பாம்பினுளில்
தோணிடுங்கன்மங்கூடாத் துலைவழிசெல்வன்கல்வி
வாபமற்பலாபம் வந்திடுமுடனேகேடாம்
நாணுவன்பாபத்தாலே நன்மையுந்தின்மையாமே' 295

தின்மையாங்காரிபொன்னோன் றிடமுடன்வழக்குவின்பம்
நட்பையாங்கல்விக்கேள்வி ஞானமுமறிவுமேலாம்
பன்முறைகெட்டகூடும் பலனுறுமதிகமில்லாத்
தன்மையாம்புகரினுளில் தன்சுகமபலாாலே. 296

இந்த புதன்புக்தி தனது சந்திரன் சுபமாகில் இவரந்தரநாளிற் கலகம்கூடும் விரயமாகும் பணச்சிலவு சமனும் வாணிபாதிபோன்ற வங்கமுயற்சியில் தூதுபோன்றவையா லற்பலாபமாகிலும் பிரபல மில்லாத பலனுகும்.

பாபமாகில் பகை மனப்பயம் தேக பலஹீனுதிகபநோயாம் வாணிபாதி முயர்ச்சிகளால் நஷ்டம் துக்கபலனுகும்.

சூரியன் குஜன் சுபமாகில் இவரந்தரநாளில் உஷ்ணுதிக்காதி சிரசு நேத்திரநோயும் பல கவலையும் பலவகை வருத்தமும் பொருள் விரயம் பல விவாதமு முண்டாகும் இதரர்களாலன்பு முதலிய சுகத்தையும் உதவிகளையும் தன்னோால் கெடுதலையும் அடைவன்.

பாபமாகில் பகை கலகம் வியாதி பீடையும் பல ஸ்தல வலைச்சலும் தன தானிய மத்திம லாபமாம்.

இராகு கேது வினந்தரகும் மேற்கூறிய பலனே நடக்குமென்பதாம்.

குரு சனி சுபமாகில் இவரந்தரநாளில் வெற்றியுண்டாகும் பல ஜெயமாகும் வழக்குவெல்லும் இராஜஜீவனுதி வெற்றிகள் சுகமுமின்பமும பழயதனவரவு நூதன பிரபுமேலானேரின்ப,முண்டாகும் வஸ்திராபரணுதிலாபமாம்.

பாபமாகில் மிக நஷ்டமும் விவாதமும் தனவிரயமுமாகும் முயர்ச்சிகெடும் கலகத்தாற்பயம் அயலிடமலைச்சல் கையுதவி கெடும்.

சுக்கிர திசை சுக்கிரபுக்தி யந்தாபலன்

பெருமைசேர்புகரில்வெள்ளி பிருகுவின்றனதுதிங்கள்
வருமையாமனைவிமக்கள் மாளிதிக்கரிட்டமாகும்
அருமையாஞ்சுபமேலின்ப மகவ்தியாஞ்சமமாம்வெற்றி
தருமமாமயல்தேசங்கள் சஞ்சாரமின்பமேலே. 297

இன்பமாம்புத்திகாரி இவர்சுபராகில்வாதம்
நன்மையாம்பெற்ரோராலே நாணயவிரயமாகும்
பன்வகைபாபனங்கள் பணதியாம்சுபமாகில்
வண்மையாம் வாதம்நோயும் மன்பகைவிரயந்தானே. 298

திரவியவாணிபத்தோ டியல்புறும் மன்னால்வெற்றி
புரவிபுத்திரமில்லாதாம் பொன்முதல்நகையும்கூடும்
விரயமாஞ்சேய்மபான்னதி வின்பமேற்றனங்கள்கூடும்
வருவது அழியும்பாம்புள் வகைதப்பாய் வழக்குத்தானே. 299

இந்த சுக்கிரன் தனது புக்தியில் தனது அந்திரம்சுபமாகில் இவராந்தரநாளில் பிதுர்வகைப் பெண் முதலியவர்களால் பலவிவாதம் குடும்ப பிரஜாதி ஸ்திரீகட் கரிஷ்டம் பகை கலகம் நேத்திராதி நீர் நோய் பல கவலை தனதானியு விரயம் அயலிடவாசமாகும் தன்னோ டொற்றவர் பகைகூடும் பெண்களாற் குறைவுநேரும்.

பாபமாகில் பலவகை துக்கம் பெண்வழியழியும் சுகம் முதலிய வைகெடும் பாத்தியமும் நிச்சயமாகக் கிடைக்கக்கூடியதுங் கைதவறி வருந்தும்படி நேரிடும் பல கவலையுண்டாகும்.

புதன் சனி சுபராகில் அதிக விரயம் கலகம் குடும்பத்திலேயே சூது நடக்கும் பூர்வலிகிதாதி பாத்திய முறையாற் றனச்சேதமாகும் பலவகை பயமாகும் அயலோராலின்கக் கேடுண்டாகும்.

பாபமாகில் முயர்ச்சிகெடும் குடல் நரம்பு ஸம்மந்தவியாதி துன்ப முண்டாகும் அதிக விரயமாகும் பிறரால் சில உதவிபெறினும் பிரபல மில்லாது கேண்டாகு மதன தாணியக் குறைவாகும் மிக அருமை யும் பிரியமுள்ள பொருளேனும் மனிதரேனும் கெடுவதால் துக் கிப்பன்.

குரு குஜன் ரவி சுபமாகில் பகையின்பம் நஷ்டமானதும் பல நாளாக முயர்ச்சிப்பதும் கைகூடும் தனவிரயமேலாகும் பந்து சுப விரயம் அயலாராற் பிறபலவெற்றி உதவியும் கிடைக்கும் பரஸ்தல சஞ்சாரத்தால் இன்பம் நேரிடும் நூதனவஸ்து முதலியவைகள் கைகூடும் ஸ்திரீ முதலிய புத்திர சுகாதி யின்பமாகும்.

பாபமாகில் உற்றவராற் கெடு பயம் வஞ்சனை முதலிய கெட்ட பெயருண்டாகும் பொருள் நஷ்டம் கடன் துக்கங்களால் மிகவும் நஷ் டம் வரும்.

பாம்புகளில் பலகலகம் வீண் வாதம் தன்பொருள் பிறர்கையிற் பற்றல் பலகடன் விசேஷமான நோய் தனதானியாதி நஷ்டபலனாகும்.

சுக்கிரதிசை சூரியன் புக்தி யந்தரபலன்

பளிங்குவிற்கதிரோன்றன்னால் பணிகுசன்றனிலேகண்டம்
வளங்களாயுற்றகேடு மானிதிவிரயமாகும்
இளங்கொடிசுசுக்கட்பீடை எண்ணியகன்மங்கூடா
விளங்குவதழிவுண்டாகு மெய்யினிற்பிணியுமாமே. 300

தணிசுகமாகும்புந்தி பிரைகுருகல்வியின்பம்
வணிகமும்வெற்றியோடு வாகனம்மணப்பேரின்பம்
துணிவுளகருமநன்றுஞ் சுபமெனிற்பவமேற்றுன்பம்
அணிமுனம்புகன்றவெல்லா மரிட்டமாமவையாற்கேடே. 301

அவைபுகர்காரிபாவ மமர்ந்துறிற்கைப்புங்கேடும்
சுவையறும்பெற்றோர்துக்கம் துலைவழியரிவைகண்டம்
அஸ்வமாஞ்சுபமேலின்ப மடுத்திடுசமமாம்வெற்றி
நவபலன்கூடுமென்றே நவின்றனர்கணிதநூலோர். 302

இந்த ரவி புக்தியில் (தனது பாம்புகள் குஜன்) (பாபமாகில்) பகை இராசத்துவாரத்தால் நஷ்டம் நாமக்குறை திடீரென்ற விரயம் பெற்றோருதவியுள்ளாரை இழந்தல் முயற்சிகெடும் வெண்கருமை வஸ்துவால் நஷ்டமாகும்.

சுபமாகில் விரயஞ் சமலாபம் கெடுதற்பலன் காலதாமிதாதி நஷ்ட மிழுக்குக்களின்மீது கைகூடுதல் தனவிரயமாகினும் பின் லாபம்.

புதன் குரு சந்திரன் சுபமாகில் இவாந்தரகாலத்தில் வெற்றியும் சுகமும் இன்பமகிழ்ச்சி கல்வி மன்னரிவைகளாற் பிரபல கீர்த்தி ஜீவனாதிபிரபலம் தெற்கு வடக்கென்னுந் திக்கிலுண்டாகு மென்றும் மிகவும் மேலான சுகம் நூதன வாகனாதி இடம் முதலிய சாமான்கள் நன்மையுடன் கிடைக்குதல் பிரபலவெற்றி மேன்மையாகும் வாணிபம் முதலியவைகளும் வடக்குமேற்கால் கூடும் பிரபலஜெயமாகும்.

பாபமாகில் நம்பிக்கைகெடும் கலகமுண்டாம் கோள்வலுக்கும் பயம் கடன் கல்வி முதலிய பல முயற்சியாலும் கஷ்டம்வரும் லிகித மூலிய தீங்குண்டாகும் ஸ்தானபிருஷ்டமாகும்.

சுக்கிரன் சனி சுபமாகில் இன்பங்கூடும் செயம் பெருமைகள் தழைக்கும் வெண்சிகப்பு நிறவாணிப பிரபலமாகும் பிறரால் மிக உதவியுண்டாகும் பெண் அல்லது அன்னியர்களின் உதவிசேரும் மிக மேன்மை கிடைக்கும் பழைய வஸ்துக்கள் நூதனமாக பலிக்கும் சீவனவெற்றி யுண்டாகும்;

பாபமாகில் பழைய பொருளழியும் பூர்வகடனால் வருந்தி இளைப்பன் தனவிரயம் பலவகைத்தொந்திரவு பெற்றோர்க்காகும் வெளிக்கு மேன்மையும் அந்தரக் கேடுமாகும் பெற்றோர்வகை துக்கமுண்டாகும்.

சுக்கிர திசை சந்திரன் புக்தி யந்தரபலன்

கண்டிடும்புகரிலிருந்து கலங்கமில்மதிபொன்வெள்ளி
கொண்டிடுஞ்சுபத்தாலின்னல் குறுகிடுகன்மங்கூடும்
வண்டிசையின்பம்போகம் மன்னினாற்செல்வமுண்டாம்
எண்டிசைத்தேசம்பாரே வானியல்பதுபரதேசத்தே. 303

தேசமாம்பவமேற்கேடு திரிந்துழல்கன்மங்கூடா
வாசமுமிழப்பன்வெற்றி வாணிபந்தன்னாற்கேடாம்
நேசமாம்புத்திகாரி நீண்பணிசுபமேல்யோகம்
பாசமாமன்னர்மெய்க்கும் பலகலையின்பம்பாரே. 304

பாரொடுபணிபாத்ரம் பலமுயல்வாகனங்கள்
தார்புனைக்குழலியின்பந் தனமொடுகாவிலாபம்
நேர்பொராப்பவமேயாகில் நிருத்தலாயுரைத்தகேடாய்
சேருமேகதிரோன்செவ்வாய் சிலபாகம்நன்மையாமே. 305

இந்த சந்திர புக்தியுள் (தனது குரு சுக்கிரன்) (சுபமாகில்) நினைத்தவை கூடும் பகை நீங்கும் பழைய பொருள் கைகூடும் குடும்ப சுபசோபனாதிகள் மேலாகும் இயல்பான வெற்றியும் இராஜ பேட்டியும் வாணிபாதி முயற்சி சீவனலாபமுங் கைகூடும் வெண்மஞ்சளான வஸ்துக்களால் மிகலாபமும் பூமி முதலிய தோப்புகள் பயிர் இடங்கள் மேலாய்க் கூடும்.

பாபமாகில் முயற்சி வீணாகும் பெரும்பெயர்க் குறைவு சமலாபமாகும் அடுத்தவர்களால் தனங்கெடும் பெற்றோர் முதலிய உதவியுள்ளார்க் கஷ்டமும் துக்கமுமாகும் போனயிடங்களிலும் நன்மையின்றி அலைகுதலாகும்.

பாம்புகள் புதன் சனிசுபமாகில் இவராந்தரகாலத்தில் வெற்றியும் விடாவழக்கும் வெல்லும் போனபொருள் சீவனாதிகள் சேரும் பலவகைத்தொழில் வாணிபம் வெண் கருமை நிறமுள்ளவை தெற்கு மேற்கு திக்கினால் லாபஞ்சேரும் பிரதேச மன்னரால் செயமாகும்.

பாபமாகில் முயற்சி கெடும் தனதானிய நஷ்டம் முன்வகைப் பொருள் முயற்சியால் கலகம் குடும்பவாதம் பொன்றன நஷ்டமாகும் ஆராத் துக்கசோகம் உண்டாகும்.

சூரியன் குஜன் சுபமாகில் அற்ப லாபமும் முயர்ச்சி வெற்றியும் பிறராற் சில மேன்மையும் புண்ய ஸ்தலாதி கீர்த்தியும் தனவெற்றியு முண்டாம்.

பாபமாகில் தேகவியாதி யுபத்திரவம் பல கவலை சிரசு அல்லது மனைவிக்கு ரத்தம் நேத்திர உபத்திரவம் தவருதலால் தேகவிரணம் பலவகை யரிஷ்ட முண்டாகு மென்பதாம் மேற்கண்ட பலன்கள் உடையானுக்கேனும் பெற்ரோர் சகோதிரம் புத்திர வகைக்கேனும் உண்டாகும்.

சுக்கிர திசை குஜன் புக்தி அந்தர பலன்

புகர்தனிற்சேயோன்புத்தியிற்றனது பொன்னவன்கதிர்பணிநாளில்
அகத்தினுற்கேடுபலதனவிரய மன்புளார்க்கரிட்டமுமாகும்
தகத்தவைபோகும்சுபமெனிற் சமனுய்த்தானுறுஞ்சீவிதமேலாம்
மகத்துவத்துடையார்கிருபையோடின்பம் வருஞ்சமவாழ்வதுதானே.

வாழ்வுறுமதியோன்காரியின்னுளில் மன்பகையிடர்வரும்விரயம்
தாழ்வதுமுண்டாம்பலபொருட்கேடு தன்னவர்க்கரிட்டமவ்வழியால்
பாழ்தலம்பூமியில்லதுகூடும் பவமெனிற்பலவகைக்கேடும்
ஊழ்வினையொன்றேவரும்பலகண்ட முறைவராற்பலகேடே. 307

பலம்பெரும்புகரோன்மாலிவர்சுபரேல் பற்றிலாச்சுகமனையின்பம்
தலமதுபேரும்வாணிபமுறையாற் றனமதுசமமெனப்புகல்வர்
வலமுறைதிக்கால்மிகுதனலாபம் மணமகப்பேருடன்பவமேல்
சலனமுமுண்டாமகிழதுகுன்றுந் தாணிமன்னரிவையர்கேடே. 308

இந்த குஜ புக்தியில் (தனது பாம்புகள் குருரவி) சுபமாகில் வந்த பிணிபோம் வழக்கு வெல்லும் முயர்ச்சியால் லாபமும் இராஜ பேட்டி ஜெயலாபமும் பிரபலமும் பெரியோர் தரிசனம் ஜீவன வின்ப மேன்மை ஸ்திரமின்றி கைகூடும்.

பாபமாகில் பலவிக்கினம் நரம்பு குடல் சம்பந்த ரோய் தவருத லான பண்டம் பயம் காரிய கிலேசம் ஞாயத்திற் பிரவேசிக்கினும் கேடாக முடிதல் கடன் சோரசத்துரு பயம் உண்டாம்.

சந்திரன் சனி சுபமாகில் பகை நீங்கும் பெற்ரோர்வகை மேன்மையும் மிகு உதவியோர்களா லின்பமும் சுபமண விரயம் பிறர்கள் வலுவிற் சுகஜீவனமும் இஷ்ட சித்தியும் உண்டாம்.

பாபமாகில் பல நீருபத்திரவங் காணும் பெற்றோர்வகை துக்கம் விரயமதிகம் மேலோர்களின் பகை கலகம் பொருள் நஷ்டமய விடங்களி லுண்டாகல் பரஸ்தல சஞ்சாரம்.

சுக்கிரன் புதன் சுபமாகில் நல்வித்தை மேன்மை கீர்த்தி ஜெயம் பலவகை யின்பவெற்றி வாணிபாதி சீவனத்தால் பிரபல லாபம் இன்ப சுகம் தன தானிய லாபம் ஸ்திரீ வகை யின்ப மேலாகும் இதரர்களின் சொத்துக் கதிபதித்துவ மலதுதனங் கூடும்.

பாபமாகில் மனைவியால் நஷ்டம் அவமானம் சீவனாதி பங்கம் சமதியோர் கலகம் தேக மெலிவு பலவகை கஷ்ட பலனுகும்.

சுபபாப மிச்சத்திற்கு இவைகளிற் கூறிய அந்தந்த அந்தர காலத்தில் சற்றுகாலம் சுபபலனும் சற்றுகாலம் மத்திம பலனுமாக நடக்கு மென்பதாம்.

சுக்கிர திசை இராகு புக்தி அந்தர பலன்

புகரவன்றனிலேபாம்பு புத்திரட்டன துகாரி
மிருசுபமாகில்வெற்றி வேள்வியோடின்பமேலாம்
பகவனூர்பூசையோடு பல்லவர்சேர்க்கைவெற்றி
அகமதுமேலதாகும் மரிவையாரின்பமாமே. 309

இன்பமாம்சுபத்தாலே யிறைவரானட்டநோயும்
துன்றமுமிடிவாந்துக்கந் துலைவழிநட்டங்காணும்
தன்பதியழியும்பொன்மால் தரைசுதன்பவமேல்முன்னும்
பின்சுபமகிழ்வுபூமி பிரபலங்கல்விபெண்ணே. 310

பெண்டனூல்யோகமாகும் பிறநகர்க்கீர்த்தியின்பம்
பண்புறுமமதியோன்வெள்ளி பாலகர்க்கரிட்டம்வெப்பால்
கண்புடைநோயாம்நல்லாய்க் கனத்துறில்வாகனங்க
ளெண்ணிவதின்பமாகு மிறைபலன்றிடமில்லாதே. 311

இடமிலாச்சுகமுமாகும் சிறியவாறிவைநோயா
விடமதுதிரிந்துவாழ்வன் செங்கதிர்பணியின்னுளிற்
புடமெனும்பிணியாற்கண்டம் புகலுவர்வெற்றோரிவ்வோன்
றடமுலையரிவையார்க்குந் தான்பலநோயுந்தானே. 312

இந்த இராகு புக்தியில் தனது சனி சுபமாகில் முயர்ச்சி வெற்றியாகும் கலகம் விவாதங்களால் தலமுண்டாகும், பழைய பொருள் கைகூடும்.

பாபமாகில் பலவகைகெடும், வழக்குண்டாம், முன் பொருளாலு முன்னோராலுங் கலகம், இராஜவிட்வரம் விவாதமுண்டாகும். பல கடன் வரும் துலைவழியில் நட்டமும் பிணியும் வரும்.

குரு புதன் குஜன் பாபமாகில் முன்கூறிய பலனாகும்.

சுபமாகில் வெற்றியும், கல்வி முதலிய மன்னரின் உதவியால் பிரபல கீர்த்தி வெற்றிகளும்; தனதானியலாபம், பலவாணி பாதிகள் பிரபல சுமங்களாதி மேன்மையும், பூமி கிரகவாகனாதி யின்பமுண் டாகும் பின் அவைகளில் தகரால் விவாத விரயம் அற்பம் நேரிட்டு நீங்கும்.

சந்திரன் சுக்கிரன் சுபமாகில் பெண்வர்க்க மேன்மை ஓர் இதரர் களின் சொத்து முதலானவைகளை தான் கையாடல் அதிகாரியாகு தல் ஜீவனாதிமேன்மை வாணிபங்களில் இருவரின் உதவியால் 2- வகை லாபபிரபலம், வடமேற்கு தெற்கு இவ்வித திக்கால் ஜெயமும் பிரபு மேன்மை இயாவரும் மேலாகக் கொண்டாடுதலாம் மிக கீர்த்தி யுண்டாகும்.

பாபமாகில் முயர்ச்சிக்கேடு ஸ்திரீகளால் துக்க சோகமும் பல கவலையும் சில பகையோரால் பலவகை துக்காதிக் குறைவும் தனதா னிய நஷ்டமாகும் கட்டிடம் வாகனாதிகளால் இராஜவிட்வாதி நட்ட பலனும் உபாதியு முண்டாகும்.

சூரியன் கேது இவரந்தரகாலம் பலகேடு சிரோமார் நோயும் கலகம் வெண்சிகப்பு நிறவாணிபமேனும் வஸ்துக்களேனும் நஷ்ட மடைகுதல் வழக்கு நட்டபயம் சிறியவரால் சோரம் கட்டம் உண் டாகலாகும்.

சுக்கிரதிசை குருபுக்தி யந்தரபலன்

போற்றியபுகரில்பன்னவன்றனது புந்தியோடிந்து நற்சுபமேல்
சாற்றிடுங்கல்விமேலதாம்புவியுள தானெனுந்தனமிகவில்லான்
நேற்றியாந்தொழிலுந்தனதெனவதியாந் நிருபரால்வெற்றிமடைவன்
கூற்றெனும் பவமேற்பலதனநாசங் கூடுமேநஷ்டமும்பிணியே. 313

நட்டமாம் தலக்கைவிட்டே நாணிவன் புகர்பாப்பின்னுள்
துஷ்டரால்நன்மையின்பஞ் சூதினாற்செயமேன்மன்னர்
விட்டதோர்பகையை வெல்வன் வீணசுபத்தார்கேடாம்
கட்டுண்டுநிற்பன்றேயக் காட்சியாலநட்டமாமே. 314

காட்சியாங்காரிசேயுங் கதிரிவர்சுபமேல் வெற்றி
ஆட்சியாமிடமேலின்பம் அருமையாம்பிரபலங்கள்

மாட்சிமையாகுமன்னர் வகையினுற்செல்வந்தீயேல்
சூட்சுமமாகுநன்மை துலேயிடமலேச்சல்கேடே. 315

இந்த குருபுக்திநாளில் தனது புதன் சந்திரன் சுபமாகில்வெற்றி கூடும் பல அடிமை சமலாபம் கீர்த்தி வித்தையறிவினுல் மேன்மை ஒருக்க முபதேசாதியின்பம் சுபமங்களாதி மகவு மேன்மையாம்.

பாபமாகில் கலகம் அதிக விரயம் கடன் பிணிவாதை உலர்த்த லங்களில் நேரும் அன்னியரால் லாபமுங்கெடும் வஸ்திராபரணுதி கள் சத்துருவாலழியும் நாமக்குறைவு தலம் விட்டலேவன் போன விடங்களிற் காரியக்கேடு நஷ்டமாகும்.

சுக்கிரன் பாம்புகள் சுபமாகில் பாத்தியமில்லாதவை களுடனே கைகூடும் விவாத ஜெயம் பிற சொத்துக்கு மேலதிகார மேன்மை யும் வாணிபாதிலாபம் களத்திராதி சுகபோக வடிமை சேருதல் இன் பம் அலங்காரவஸ்து வாஹனவின்பங் கூடுமாம்.

பாபமாகில் பகையும் ஒருவருக்கு ஏற்கும் விஷயங்களால் தன நஷ்டம் பலகவலேகள் தனதானியக்குறைவும் பலவகை நஷ்டம் கடன் ஓர் ஸ்திரீ மூலிய விவாதக்குறைவு நேரிடுமென்பதாம் பிளவை விஷ நீருபத்திரவங்கண்டு நீங்கும்;

சனி சூரியன் குஜன் சுபமாகில் பெற்ரோர் சகோதிர மிவ்வகை யாலின்பம் குடும்பவெற்றி தனலாபம் விவாதப்பொருள் கைகூடும் ஜெயபலனுகும்.

பாபமாகில் பகை கலகம் மனப்பேதம் ஸ்தானஜீவன பேதம்மூல நோய் பித்தநீர் நோய்த்துன்பமும் திடீரென்ற நஷ்டமும் தனதானி யக் குறைவும் பலவகைபரிஷ்ட பலனுகும்.

சுக்கிரதிசை சனிபுக்தி யந்திரபலன்

வன்புகர்தனிலேகாரி வரும்புசிப்பவன்றன்னுளும்
இன்புறுபேணியோர் பாவமிருதனப்பகையுங்கண்டம்
நன்சுபமாகில்வெற்றி நாளடவதனிற்கூடும்
பன்முறைமேலாம் வாழ்க்கை பாங்குறுமயலாராலே. 316

அயல்வகையாலேயின்ப மாகிடும் பிருகுபொன்மால்
நயமுறிமனேயும்வெற்றி நால்வகைப் பொருளுமின்பந்
தயவுளமன்னராலே தானியுந் தனமுஞ்சேருஞ்
சேயமுறும் விவாதமெல்லாஞ் சீவனங் கூடுஞ் செப்பே. 317

செப்பிடுங்கதிர்சேயிந்து திரவியஞ்சிலநாட்கூடும்
தப்பிதம்மன்னுலின்பந் தானியமேலாம்வேழ்வி
நய்ப்புறும்பவமேல்நோயும் நாணயக்கடனுமாவன்
ஒப்பிடும்பொருளாற்கேடு உற்றவராலுமாமே. 318

இந்த சனிபுக்தியில் தனது இராகு கேது அசுபமாகில் மிகப் பகை பிணி கண்டம் தனநாசம் ஸ்தானபேதம் பழம்பொருளால் கலகம் குடும்பதுக்கம் பெற்றோர்க் கரிஷ்டம் அன்னிய தேச வாழ்க்கை கையுதவி தவரும்.

சுபமாகில் முன்கூறிய ஒவ்வொன்றும் செயமாகும் வீண் பழிக் கலகம் நன்மையாகும் பிறரால் செயலாபமாகும் தைரியவீரிய மேன்மை பரதேச மன்னரால் நன்மையான லாபமுண்டாகும் வெண் கருமையான வியாபார பலிதமாகும் ஒருவருக்காக ஒப்புக்கொள்ளு முயல்வு நேரிடும்.

குரு புதன் சுக்கிரன் சுபமாகில் இராஜவனுகூலம் திடீரென்ற பிரபலயோகம் வலுவிற்றேடிவரும் கெட்டதும் நஷ்டமானதும் மிகு லாபத்துடன் சேரும்பிரதேச வின்பமாகும் பலவியாபார முயலுஞ் செயத்தைப் பெருவன் தனலாபமாகும் மன்னரால் ஆலோசனதிகாரம் பெருவன்.

பாபமாகில் பகையும் பொருளால் கலகம் பூர்வ பகையால் கிலேச துக்கம் தனநஷ்டம் ருணம் ஜீவனதிக்கேடு திடீரென்று வரும் பாத்திர பூஷணதி சேதமாம்.

ரவிசந்திரன் குஜன் சுபமாகில் வெற்றிவரும் அசல் பொருளதிகாரமாகும் பரபோகமாகும் குடும்பஞாதி ஸ்திரீகலகம் தனவிரயம் இராஜர்களிலொருவனுற் கேடுமுடனே மற்றொருவனுல் ஜெயமும் பெருவன்.

பாபமாகில் சிரமார்பு விழிநோயும் பலவகை நீச கிருத்தியம் கொடுமையான கலகத்தால் இராஜ விட்வாம் தனதானியக் கேடு அரசர்பயம் பூமி முதலிய பொருளால் கலகம் சோராக்கினி பயமாகும்.

சுக்கிரதிசை புதன் புக்தியந்தர பலன்

சொல்லியபுகரிற்புந்தி புண்டனிற்றனதுபொன்பாம்
பல்லவராவரின்பமடுத்திடு மணப்பேர்வெற்றி
நல்லதாம்வாணிபங்கள் நால்திசைவாமத்தாலே
வல்லதாம்லாபமன்னுல் வழக்கதுவெல்வன்மாதே. 319

மாதெனும்பவமேல்நட்ட மலேச்சலும்விவாகக்கேடும்
நாதனுற்பகையும்நோயும் நற்கதிர்மதிசேய்க்கண்டம்

பேதகமாகுமாக்ஷிபெற்றவ ருற்றாராலும்
சேதமாஞ்சுபமேலற்பஞ் செலுத்திடுந்திரமில்லானே. 320

இல்லொடுபண திகூடு மெண்ணியசெயமுண்டாகும்
நல்லவருபதேசங்கள் நாட்டுடையாராலின்பம்
வல்லதாம்காரிவெள்ளிவருஞ்சுபம் மணப்பேற்வெற்றி
எல்விலாப்பூமிதன்னால் எண்ணுதல்முடியுமாதே. 321

மாதரின்பமடுத்தவர்போதகஞ்
சாதனத்துறுதானமுஞானமும்
வேதனைகள்விலகிடும்பல்லராற்
சூதுசெய்பவர்தோல்வியுந்திண்ணமே. 322

இந்த புதன் புக்தியில் (தனது குருபாம்புகள்) சுபமாகில் எண்ணம்பாதியேனும் முடிவுபெறும் மிகமேன்மை யுண்டாகும் கல்வி மன்னராற்பலனாகும் முயற்சி வெற்றியடையும் திரமிராது போன பொருளாற் லாபங்கூடும் மனம் மகப்பேருண்டாம் பெற்றோர்கட்கு சுகமும் பிதுர்வகையா லின்பமாகும்.

பாபமாகில் முயர்ச்சியில் நட்டத்துடன் கெடும் கடன் பெயர் குனறும் சிலவதிகரிக்கும் தாழ்மையோரால் அவமதிப்பு அந்தரங்கத்தில் நடக்கும் மோசமாக தன்னோரே வஞ்சிப்பர் சோராக்கினி பயம் எழுத்து மூலியத்தால் நட்டம் அவமானாதிகட் கிடமாகும்.

ரவி சந்திரன் குஜன் சுபமாயிருக்கி லவரந்தாநாளில் திரமிலாத பொருளு மதிகாரமுங்கூடும் அற்பலாபாதி பூமி கிரகவாகனங்கூடினுந்திரமிராது கீர்த்தி பெற்றோர் வகை மேன்மை நூதனலாபம் வாகனாதியின்பமடைவன் பிறர்சொத்து சுகத்தை தன்னதாக வனுபவிப்பன்.

பாவமாகில் பலவாதம் இராஜவிட்வராதிகள் தன நட்டம் தன்னோராற் கெடுதல் காய ரிணரோக பாதை துக்கம் துலைதூரம் லாபத்திற்காக செல்லினும் திடீரென்று திரும்பிவிடுதல் பல அப்பிரயோசனம் கலகம் துக்கபலனாகும்.

சனி சுக்கிரன் சுபமாகில் பிறர்வாகனாதி இன்பம் சொத்துக்கூடுதல் பெண்வகை வாணிபாதி பலவகை யின்பம் தேகதிடாதி மேன்மைகள் அதிகசுகம் வடமேற்கு தெற்கு இத்திசையால் விசேஷ தனலாபம் பிரபலசுகம் இராஜஸன்மான வெகுமான பூமிகட்டிடாதி லாபம் கல்வி ஜெபமாகும் ஜலதேசப்பிரயாண மேன்மை யின்பம் உண்டாம்.

பாபமாகில் தூரதேச மலைந்தும் வீணனவன் தனங்கெடும் பழதொந்திரவுகளும் பற்றும்குலானாதி நாமக்குறைவுண்டாகும் பல கட்டிடம்பெருவன தனதானியாதிசேதமாவன் திரமிலாலாபமும் பலகட

னும் மனக்கவலை களத்திரஞ் சிசுதுக்கமுண்டாகும் இடமிழப்பன் சேர்ந்தோராற் கெடுவன் சூது செய்பவராகினும் அவர்களை செயஞ் செய்வன் என்பதாம்.

சுக்கிரன் திசை கேது புக்தி யந்தரபலன்

கூறுமேபுகரிற்கேது கொண்டவர்தனதுவெய்யோன்
நீடெதனுஞ்சேயிந்நாளில் நினைத்தலாற்கேடுந்தோல்வி
தீராதபகையுமேனுயுஞ் சேருமாஞ்சுபமேலற்பம்
பாரினிற்சுகமோடின்பம் பலிக்குமேதிரமில்லாதே. 323

இல்லதாம்பீடைதோன்றும் இறைபுகர்புந்திதிங்கள்
நல்லவராகில்வெற்றி நாணயங்கெட்டகூடும்
அல்லலுமின்பமாகு மன்னையார்வகையிற்றீதாம்
சொல்லுவர்பவமேல்நட்டந் துடருமேவணிகத்தாலும். 324

வணிகமாங்கேடுண்டாகும் மந்தனுராவுநாளிற்
கணிகையாற்கேடுநோயுங் காட்டிடுபுனல்தேயத்தே
இணங்கியேவாழ்வுண்டாகு மிறைதனுற்செல்வமேலாம்
குணமிலாப்பவமேற்கேடு கூடிடும்பின்னுற்றுனே. 325

இந்த கேது புக்தி தனது சூரியன் குஜன் இவர்காலத்தில் அதிக உஷ்ணவிரணம் வாகனமல்லது மிருகபயம் தவருதலாய் தேகபீடை பகை குடும்ப உடனுளிகளாலேயே கலகம் தனதானிய நஷ்டம் கோபம் அகால போஜனுதி இராஜகோபம் ஆயுதவிரணபீடை சோராக்கினியால் தேகபாதையாம்.

சுபமாகில் மேற்கண்ட ஒவ்வொன்றும் அற்ப பயமுண்டாகி நீங்கும் விரயமதிகத்தின்மீது காரியவெற்றியாகும் பெரியோர்களால் இன்பமாகும் தனம் முதலிய வெற்றியுண்டாம் பெற்றோர் சகோதரிவர்களுக்கு யோகபலனுகு மென்பதாம்.

குரு சுக்கிரன் புதன் சந்திர சுபமாகில் பகைநீங்கும் பரஸ்தல வாசம் பிரபலஸ்திரீ மேன்பாடாகிய சுகம் காரியவெற்றி தனலாபம் இஷ்ட காரியசித்தி வியாபாராதி முயற்சி பிரபலமானது பலவர்ண வஸ்துவாலும் அயல் தேசலாபம் சீவனயோகம் கல்வி மன்னரால் சீக்கிரம் செயமுண்டாகினும் திரமிராதென்றும் புத்திராதியரரிஷ்டமாம் துக்கம்.

பாபபலமாகில் பலவகை கேடு களத்திரஞ் சிசு முதலிய துக்க சோகம் முயற்சியால் பிரயோசனமின்றி வருந்துதல் தனதானிய

நஷ்டம் பல கவலை வித்தை ஜீவனங்களாற் கேடு உற்ற அனுகூலபந் துவே கேடு நினைப்பார்கள் என்பதாம்.

சனி இராகு சுபமாகில் இன்பமும் பரசொத்துக் காதிபதித்து வாதி மிக மேன்மையும் திடீரென்ற பிறபலயோகம் ஈனஸ்திதியில் நேரிடும் பலவகை ஜெயம் முயற்சி வெற்றி உயர்வகைப் போகபோக் யாதி சுக சௌக்கியமானது கிடைக்கும்.

பாபமாகில் கருமசூதகம் திடீரென்ற வாதவாயுவு நோயுண்டா கும் ஜீவனத்தாற் கேடு பலவகை துக்கம் சுபவிஷய விரயம் பல கவலை ஒன்றைநினைத் திருகுதல் வெண் சிகப்பு வியாபாராதிகளால் லாபம் பிறர் சொத்து தனக்கு நல்ல தருணத்தி லுதவுதல் சுக சௌக்கிய இன்பமாகும் மோசப்பொருள் சேரும்.

சுபபாவம் கலந்த பலத்துடைய கிரகாந்தரங்களில் அவரவர் களுக்கு சொல்லியிருக்கப்படும் இருவகைப் பலன்களையுங் கலந்து ஒத்திட்டுக்கொண்டு பலனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வாறு.

சுகர் பெரு நாடி யென்னும்,

திசா, புக்தி, அந்தர, பலன்

முற்றுப்பெற்றது.

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை.—1934.

உபயோகமான சிறந்த புத்தகங்கள்

	ரூ.	அ.
ஜாதக சிந்தமணி	2	0
ஜாதக அலங்காரம் மூலம்	0	10
ஷை மூலமும் உரையும்	1	8
அகஸ்தியர் பஞ்சபட்சி மூல	0	8
அகஸ்தியர் பஞ்சபட்சி சாஸ்திரம் மூல-உரை	1	8
விஞடி பஞ்சபட்சி சாஸ்திரம் மூலமும் உரையும்	1	4
ஷை மூலம்	0	12
போகர் பஞ்சபக்ஷி சாஸ்திர மூலமும்-உரையும்	1	0
சோதிடசாரம் என்னும் பாக்கெட்சோதிடம்	1	8
கமலமுனி ரேகைசாஸ்திரம் மூலமும் உரையும்	1	0
ஆண்பெண் ரேகைசாஸ்	0	8
ஸ்திரீபுருஷ லக்ஷணக்குறி	0	12
அனுபோகஜாதக ரகசியம்	0	12
அனுபோக பிரசினை ஆருடம்	0	8
அஷ்டதிக்கு ஆருடம் 5-ஆருடம் சேர்ந்தது	0	12
சோதிட பிரஞ்ஞான தீபி	3	0
குமாரசாமியம்-திக் உரை	10	
கந்தர் நாடி	0	8
கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம்-திக் கடிதம்	0	14
ஷை 2-ம் பாகம்	1	4
ஷை 3-ம் பாகம்	1	0
சர்வ கனவின் பலன்	0	4
பெண்கள் ஜாதகம் ருது ஜனன பாலபோனி உரை	1	4
சோதிட ஆசிரியன் 2-ம் பா	1	0
சோதிட ஆசிரியன் 3-ம் பா	1	0
சோதிட ஆசிரியன் 4-ம் பா	1	0
73-வருட பஞ்சாங்கம்	7	0
அநுபவ ஹஸ்தரேகை சாஸ்	2	0

	ரூ.	அ.
சகுண்சாஸ்திரம்	0	6
சர்வஜாதக சந்தேகநிவர்	0	12
சினேந்திரமாலை	1	0
சித்தர் ரகசியமென்னும் ஆரூட சாஸ்திரம்	1	4
சுந்தரசேகரம் 1-ம் பாகம்	0	12
ஷை 2-ம் பாகம் தியாகராச	0	12
ஷை 3-ம் பாகம் தியாகராச ஆனந்தக்களிப்பு	0	12
சோதிட கோட்சாரசிந்தா	1	0
நவக்கிரக ஸ்தோத்ரம்-சக்கரம் படத்துடன்	0	8
சோதிட கடலகராதி	0	12
சோதிடக் களஞ்சியம்	0	12
ஷை உரையுடன்	2	0
சோதிட அரிச்சுவடி 4-பா	1	0
நாரதர் ஆரூட வசனம்	1	8
துய்ய கேரளம்	0	6
மணிகண்ட கேரளம்	0	8
நவக்கிரக நவகண்ட ஆரூட	0	10
பாராசாரியம்-திக் கடிதம்	0	12
பீமகவி - உரையுடன்	1	0
புலிப்பாணி ஜோதிடம் 300 திக் கடிதம்	0	12
புஜண்டர் நாடி	0	5
பெரிய வருஷாதி நூல்	1	0
சின்ன வருஷாதி நூல்	0	6
மங்களேஸ்வரியம்	2	8
மனையடி சாஸ்திரம்	0	4
மரணகண்டி	0	4
பெண்கள் ருதுவான மாத திதி வார நக்ஷத்திர பலாபலன்களும் அதற்குரிய சாந்தியாதி கிரமங்களும்	0	3
வீமேசுர உள்ளமுடையான்	1	4
சூடாமணி உள்ளமுடையான்	1	0
ஸ்திரீபுருஷ ஜாதகதிறவு	0	10

குறிப்பு:—இதற்காகுத வேதாந்த, சித்தாந்தருக்க, இலக்கண, இலக்கியம். புராணம் இதிகாசங்கள், சோதிட சாஸ்திரங்கள் ஆயுர்வேத யூநாநி வைத்திய சாஸ்திரங்கள், மாந்திரீகம். ஜாலப் புத்தகங்கள் காதலருக்குவேண்டிய நூல்கள், நவீன தமிழ் நாவல்கள் ஆர்டர் செய்தால் தாமதமின்றி அனுப்புவோம். கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

வான்மீகர்

ஆரூட சாஸ்திரம்

150-பாடல் மூலமும்-உரையும்

இதை வாசிக்கும் நேயர்கட்குத் தெரிவிப்பது யாதெனில் வான்மீகர் திருவாய் மலர்ந்தருளிய ஆரூடசாஸ்திர மென்னும் 150-பாட்டுகளுக்கும் இதுவரையில் உறையில்லா திருந்ததினல் அதை எளிதில் தெரிந்துக்கொள்ள இயலாமல் ஜோதிட ஆரூட மறிந்தவர்களைத்தேடி அவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது; அக்குறை தீர்ந்து ஷை பாட்டுகளுக்கு எளிதில் தெரியும்படி உரை எழுதி அச்சிடும்படி அநேகர் கேட்டுக்கொண்டதின் பேரில் ஷை வான்மீகர் ஆரூட சாஸ்திரம் 150-பாட்டுகளுக்கு தெளிவாயும் [illegible]தில் தெரிந்துக்கொண்டு பலாபலன்களை அடையும்படி உரையெ[illegible]ல உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது. விலை அணு [illegible] 0

கமலாமுனிவர் அருளிச்செய்த

அஸ்தரேகை சாஸ்தி[illegible]

மூலமும்-உரையும் படங்களுடன். இதன்விலை ரூப[illegible]

இவ்வுலகின்கண் சகல ஜீவராசிகளிலும், மேலான[illegible]மத்தைப்பெற்ற நாம், பயன்படும்படி கீர்[illegible]ந்த பதினெண் சித்தர்கள் நம்மீது கிருபை[illegible]ந்து சரியை கிரியை யோகம் ஞானம் மணி[illegible]ரம் வைத்தியம் சோதிடமென வகுத்து தேக[illegible]ள்ள ரேகைகளைப் பார்த்து பலா பலன் சொ[illegible]டிய சாஸ்திரங்கள் ஏராளமாய் எழுதிவைத்[illegible]ரு ரெனினும் அதில் சொல்லும் பலா பலன்[illegible]றிய சிலருக்கு இருளாக இருந்ததை உ[illegible]ந்து சாமுத்திரி காலக்ஷணத்தை யெடுத்தோத வல்லவர்களைக்[illegible]ண்டு அதிக பிரயாசையுடன் செந்தமிழ் நடையில் உரையெழு[illegible]கள் பலாபலன்களை உள்ளங்கை நெல்லிகனிபோல் தெரிந்துக்[illegible]ளும் படி ரேகை படங்களுடன் உயர்ந்த கடிதத்தில் அச்சிட[illegible]ருக்கின்றது.

எல்லா புஸ்தகங்கள் அடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடாராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.